# தமிழரசு

1.5.1996 ரூ.3








★ வியர்வையினால் ஒரு விதி எழுது...... 25

# இந்த இதழில்...


★ வெள்ளுடை வேந்தர் பிட்டி தியாகராயர் .............................. 2

★ செய்திகள்... செய்திகள் ........................ 7

★ நரைமுடித்து முறை செய்த கரிகாற் சோழன் .................................. 9

★ தமிழ் வளர்த்த பெரியார் மயிலை சீனி. வேங்கடசாமி................ 17

★ பெண் கல்வியின் பெருமை ................ 20

★ எங்கெங்கு காணினும் சக்தியடா ........ 26

★ இவர் ஆசியாவிலேயே முதல் பெண்மணி................................ 33

★ புதியதோர் உலகம் காணத் துடித்த புரட்சிப் பாவேந்தர்.............................. 35

★ சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ......... 38

★ அறப்புரட்சிக்கு வித்திடும் தொழிலாளர் இயக்கம் ........................ 41

★ மூலிகையின் முக்கியத்துவம் ................ 44




இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை. (41)**

★ இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவருக்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.


# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

சித்திரைத் திங்கள் : 19

மலர்: 26 இதழ்: 21

1.5.1996

விலை: ரூபாய் 3

# வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர்



திராவிட சமுதாயச் சிற்பிகளில் குறிப்பிட்டுப் பாராட்டத் தக்க பெருமை பெற்றவர் வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர் ஆவார்.

தேவாங்கர் வகுப்பில் 1852-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ஆம் நாள் தியாகராயர் பிறந்தார். முதல் விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இவர் பிறந்தார். இதற்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் தான் சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்பட்டது.

**வணிகக் குடும்பத்தில் உதித்த விடிவெள்ளி**

இவருடைய முன்னோர்கள் தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுத் தோல் பதனிடும் சாலைகளை நடத்தி வந்தனர். இவரது பரம்பரைத் தொழில் கைத்தறி நெசவு. அரசாங்க உயர்மட்ட வேலைகளில் நாட்டம் செலுத்திடாமல் வர்த்தகத்திலும் சிறுதொழில் வளர்ச்சியிலும் ஆர்வம் கொண்டார் இவர். கைத்தறி நெசவுத் தொழிலில் நாட்டம் செலுத்திப் பெரியதொரு நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கிப் பலருக்கு வேலைவாய்ப்புத் தந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் படித்து 1876-ஆம் ஆண்டில் பட்டம் பெற்றார். செல்வமும் செல்வாக்கும் பெற்றவர் சர்.பிட்டி தியாகராயர்.

**சுதேசி இயக்கச் சுடரேந்திய கரங்கள்**

1905-ஆம் ஆண்டில் வங்காளப் பிரிவினைக்கான கிளர்ச்சியில் முகிழ்த்த புதிய தேசிய எழுச்சியின் காரணமாகச் சுதேசி இயக்கம் நாட்டில் பரவலாகப் பரவத் தொடங்கியது. இச்சூழ்நிலையைப் பயன்படுத்திப் பண்டைய நெசவுத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டும் பணியில் வெற்றி கண்டார் இவர். தேசிய நிதித் தொழில் சங்கத்தின் சார்பில் 1908-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்திய நெசவுத் தொழில் போட்டியில் அவரது தொழிற்சாலை நற்சான்று இதழையும் பதக்கங்களையும் பெற்றது.

தென்னிந்திய வர்த்தக சபையை ஆரம்பித்தவர்களில் இவரும் ஒருவர். அச்சபையின் தொடக்கக் காலமான 1910-லிருந்து 1921-ஆம் ஆண்டுவரை அதன் தலைவராக இருந்து தென்னிந்தியாவின் வர்த்தக வளர்ச்சிக்கும், தொழில்கள் வளர்ச்சிக்கும் அரும்பெரும் தொண்டுகளை ஆற்றியுள்ளார். நாட்டில் தொழிற் கல்வியைப் பரப்பும் பெரும் முயற்சிகளை எடுத்துக் கொண்டார்.

**கல்வி வளர்ச்சிக்கோர் காப்பரண்**

செங்கல்வராய நாயக்கர் தொழிற்பயிற்சிப் பள்ளியின் நிர்வாகக் குழுவில் அவர் ஓர்

உறுப்பினராக இருந்து அப் பள்ளியை வளர்ச்சியடையச் செய்தார். அவரே சொந்தமாக வண்ணாரப்பேட்டையிலும் ஒரு பள்ளியையும் நடத்தி வந்தார். உயர்தரக் கல்வியிலும் அவர் அதிகக் கவனம் செலுத்தினார். பச்சையப்பன் கல்லூரி பச்சையப்பன் அற நிறுவனங்கள் ஆகியவற்றின் தர்மகர்த்தாக்கள் சபையின் தலைவராக அவர் பல்லாண்டுக்காலம் இருந்து, அந்த நிறுவனங்களைப் பெரும் வளர்ச்சியடையச் செய்தார்.

காங்கிரஸ் கட்சியில் அவர் ஆரம்பத்தில் பங்கேற்றார் சென்னையில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டார். நாளடைவில் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

### நாதியில்லாதோர்க்கு நம்பிக்கையொளி

பிராமணரல்லாதாரின் தாழ்ந்த நிலையைக் கண்டு, அவர் உள்ளம் வேதனை யடைந்தது. அவர்கள் கல்வியில் மிகவும் பிற்போக்கில் இருந்தனர். அரசாங்க வேலைகளில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். தம்மின் மக்கள் சமுதாயத்தின் அடித் தளத்தில் கிடந்து அவதிப் படுவதைக் கண்டு, தியாகராயர் மனம் வெதும்பினார். வீழ்ச்சி யுற்ற சமுதாயத்துக்கு எழுச்சி யூட்ட, அவரும் டாக்டர் டி.எம். நாயரும் சேர்ந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் என்ற நீதிக் கட்சியைத் தோற்றுவித்தார்கள்.

நீதிக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக் கையைப் பிராமணரல்லாத பெருங்குடி மக்களின் உரிமைச் சாசனத்தை 1916 நவம்பர் 20ஆம்

# திராவிடர் நிலையை உயர்த்திய தியாகராயர்

சர் தியாகராயர் தோன்றி, திராவிடப் பெருங்குடி மக்கட்குத் தலைமைப் பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்துவந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டு, சமுதாயத்தை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை ஆகியவற்றில் இடம் பெற்று உழைத்தார்.

எங்கு நோக்கினும் திராவிடர் துன்ப வாழ்வில் சிக்கிச் சிதைந்து வந்த அந்தக் காலத்தில்தான் தியாகராயர் தோன்றினார். வேதனைமிகுந்த காட்சியைக் கண்டு உள்ளம் வெதும்பினார். சீறிப்போரிட்டுச் சீர்கேட்டை ஒழிக்கச் செயலிலே இறங்கினார். அவரைப் பொறுத்த மட்டும் அவருக்கு ஒரு குறையு மில்லை. மற்ற பிரச்சாரங்களை விட அறிவுப் பிரச்சாரம்தான் முக்கியமானதென்று தியாகராயர் எண்ணினார். அன்றே அவர் அறப்போரைத் துவக்கினார். அந்த அறப்போர் இன்று வெற்றிபெற்றிருப்பதைக் கண்டு நாமனைவரும் பூரிப்படைகிறோம்.

இன்றைய தினம் திராவிட இனம் வளர்ந்திருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அரசியல் வாழ்விலோ பலர் இடம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறோம். அன்று தியாகராயர் மத விசயங்களிலே புகவில்லை. புரோகிதத்தை எதிர்க்கவில்லை. ஏனென்றால், முதலில் அவர், திராவிடர்களுக்குத் தன்னுணர்வை ஏற்படுத்தி மக்களைத் தட்டி எழுப்பிய பின்தான், மத விஷயத்திலே புக விரும்பினார். முதன் முதலில் நம் மக்களுக்கு என்ன தேவை என்பதை நன்குணர்ந்த அவர் முதலில் அப்படி ஈடுபட்டார்.

**—பேரறிஞர் அண்ணா**

நாள் சர்.பிட்டி தியாகராயர் தமது கையெழுத்திட்டே வெளியிட்டார்.

அந்த அறிக்கை, நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. புதிய பாதை அமைக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, அல்லும் பகலும் அயராது உழைத்தார் செயல் வீரர் தியாகராயர்.

ஒரு வகுப்புமீது மற்றொரு வகுப்பு ஆதிக்கம் செலுத்தாமல் இருக்க, வகுப்புகளுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் அரசாங்கத்தைத் தட்டிக் கேட்கத் தொடங்கியது. கடைசியில் அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றது.

1920-ஆம் ஆண்டில் அப்போதைய சென்னை மாகாணத்தின் 98 தொகுதிகளில் நீதிக் கட்சியினர் வெற்றிவாகை சூடினர்.

### பதவியை விரும்பா கெழுதகை

சட்டமன்றப் பெரும்பான்மைக் கட்சித் தலைவர் என்ற முறையில் ஆளுநர் லார்டு வெல்லிங்டன், முதலமைச்சர் பதவியேற்று அமைச்சரவை அமைக்குமாறு தேர்தலில் நின்று வெற்றி பெற்றவரும் நீதிக் கட்சித் தலைவருமான தியாகராயரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், தியாகராயர் பதவி ஏற்க மறுத்துவிட்டுத் தனது கட்சிப் பிரமுகர்கள் மூவரின் பெயரைப் பரிந்துரை செய்து அமைச்சரவை அமைக்கச் செய்தார். அவர் ஆளுநருக்கு எழுதிய கடிதத்திலும், நேரில் சந்தித்துக் கூறியதிலும் குறிப்பிட்டதாவது;

> ☺ உழைப்பு மூன்று பெருந் தீமைகளை நம்மிடமிருந்து நீக்குகின்றது; தொந்தரவு, தீயொழுக்கம், தரித்திரம்.
>
> **—வால்டேர்**

'இந்திய வரலாற்றிலேயே முன் எப்போதும் இல்லை எனும்படி, அரசியல் ஞானமற்ற பாமர மக்களைத் தட்டி எழுப்பிய பாவத்துக்காக என்னையும், அகால மரணமடைந்த என் அருமை துணைத் தலைவர் டாக்டர் டி.எம். நாயரையும் வெள்ளையரின் வால் பிடிப்பவர்கள் என்று காங்கிரஸ் தலைவர்களும், அவர்களுடைய பத்திரிகைகளும் தூற்றுகின்றனர். நான் இப்பதவியை ஏற்பேனேயானால் எனது புனிதமான கட்சிக்குக் களங்கம் விளைவித்தவன் ஆவேன். அதனால் நான் பதவி ஏற்கமாட்டேன் மன்னிக்க வேண்டும்' சர்.பிட்டி தியாகராயரின் இந்த அறிவிப்பு எதிரிகளையும் வியக்கச் செய்தது.

இந்திய வரலாற்றில், முதல் பொதுத் தேர்தலில் தனது நீதிக் கட்சி வெற்றி வாகை சூடியது கண்டு பூரித்துப் போனார் தியாகராயர்.

### மக்கள் போற்றிய மாநகராட்சித் தலைவர்

தியாகராயர் சென்னை மாநகராட்சியில் தொடர்ந்து 40 ஆண்டுகள் தொண்டுபுரிந்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட சென்னை நகர முனிசிபல் சட்டப்படி, மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவராவார் அவர். அந்த ஆண்டிலிருந்து 1923-ஆம் ஆண்டுவரை அவர் தொடர்ந்து மாநகராட்சியின் தலைவராகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னாரின் தூய தொண்டினைப் பாராட்டி அரசாங்கம் அவருக்கு 1909-இல் ராவ்பாகதூர் பட்டத்தையும், 1919-இல் திவான் பகதூர் பட்டத்தையும், 1921-இல் சர் பட்டத்தையும், வழங்கிச் சிறப்பித்தது.

அந்நாளில் சர்.பிட்டி தியாகராயர் செய்த அறச்செயல்களுக்கு அளவே இல்லை. துன்புற்ற பல குடும்பங்களை இன்புற்று வாழச் செய்தார். ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வேதனை நீக்கினார்.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து, நாட்டுக்கு உழைத்த வெள்ளுடை வேந்தர் 1925 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 28ஆம் நாள் அன்று, தமது 73 வது வயதில் இயற்கை எய்தினார்.

இன்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள உள்ளத் தெளிவுக்கும், உணர்ச்சி வேகத்துக்கும் உரிமை வேட்கைக்கும், ஏன், பூத்துள்ள மறுமலர்ச்சிக்கும், வித்திட்டவர், விதை முளைக்கவும் தம் அறிவெனும் உரமிட்டு, உழைப்பெனும் நீர் ஊற்றியவர்

# தியாகராயரும், செய்தித் தாள்களும்



சர்.பிட்டி தியாகராயர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று மொழிகளிலும் தினச் செய்தித்தாள்களை அச்சிட்டு வெளியிட்டார்.

'ஜஸ்டிஸ்' என்ற பெயரில் ஆங்கிலச் செய்தித் தாளை 1971 பிப்ரவரி 26 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்1263. 'ஜஸ்டிஸ்' என்ற இதழின் பெயரின் காரணமாக சௌத் இந்தியன் லிபரல் பெடரேஷனானது ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ் பார்ட்டி' என்றும் தமிழில் 'நீதிக்கட்சி' என்றும் அழைக்கப்படலாயிற்று.

1885-இல் ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலன் கருதி 'திராவிட பாண்டியன்' என்ற ஒரு தமிழ்ச் செய்தித்தாளை வெளியிட்டார். அதே நேரத்தில் தான் சர்.பிட்டி தியாகராயரும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களின் நலம் கருதி 1917 ஜூன் 1 சனிக்கிழமை 'திராவிடன்' என்ற பெயரில் தமிழ்த் தினச் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டார். அதன் பதிவு எண்.எம்.1279.

1885-இல் தெலுங்கு மொழியில் 'ஆந்திர பிரகாசிகா' என்ற செய்தித்தாள் வெளி வந்தது. சர்.பிட்டி தியாகராயர் அதே தெலுங்கு செய்தித் தாளை 1917 ஜூன் 10 திங்கட்கிழமை யிலிருந்து அச்சிட்டு தினச் செய்தித் தாளாக வெளியிட்டார். அதன் பதிவு எண்.1280.

அண்ணல் தியாகராயர் ஆவார்.

**வாழ்ந்து காட்டிய வள்ளல்**

இன்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னாலே, தாழ்வுற்று வறுமைமிஞ்சிக் கிடந்த பிராமணர் அல்லாதாரின் தன்மான எழுச்சிக்காகச் சமுதாயத்தில் உரிய இடத்தைப் பெற்றுத் தகுதி பெறும் உரிமைக்காகப் போராடி, நீதிக் கட்சியின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட, சமூகநலத் தொண்டர் சர்.பிட்டி தியாகராயர். சீரிய அரசியல் வாதியாகவும் புகழ்மிக்க சட்டப் பேரவை உறுப்பினராகவும் பெருமை பெற்ற தீரராகவும் வாழ்ந்துகாட்டிய வள்ளல் பெருந்தகை அவர்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி நவீன முறையில் தழைத்திடவும், முக்கியப் பகுதிகளில் புதிய பெயரில் பாதைகள் அமைத்திடவும் சென்னைத் துறைமுகம் மேலும் விரிவடையவும், இன்றுள்ள பக்கிங்காம் கால்வாய் போக்குவரத்திற்கு உகந்ததாகப் பயன்படவும், பெரிதும் உழைத்த உத்தமர் அவர். 1914-1915-இல் முதல் உலகப் போர் மூண்டிருந்த வேளையில், இறக்குமதித் தட்டுப்பாட்டைச் சமாளிக்க எவ்வாறு உற்பத்தியைப் பெருக்கலாமென்னும் உயரிய ஆலோசனைகளை வழங்கிய பொருளாதார நிபுணராகவும் திகழ்ந்தவர்.

**தொழில்நுட்பக் கல்விக்கு வந்தனை செய்த மாமனிதர்**

இந்தியக் கப்பல்துறை, கப்பல் கட்டுப் பணியின் முன்னேற்றத் திற்கும், வளர்ச்சிக்கும் பல்வேறு வழி வகைகளைத் தெரிவித்து ஆக்கம் தேடியவர் தியாகராயர். தொழில்களின் வளர்ச்சிக்கு மின்சார உற்பத்திப் பெருக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். தொழில் வளர்ச்சியிலும் தொழில்நுட்ப மேம்பாட்டிலும் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார். வெறும் இலக்கிய அறிவை மட்டும் தரும் கல்வியை அவர் சாடினார்.

☺ ஏழ்மை என்ற நோய் அகல வேண்டுமானால், உழைப்பு என்ற மருந்தைக் கொடு.

—எமர்சன்

☺ ஒரு இலட்சம் வாள்களைவிட, மூன்று பத்திரிகைகளுக்கு நான் அதிகமாய்ப் பயப்படுகிறேன்.

—நெப்போலியன்

தொழில்நுட்ப அறிவை வளர்க்கும் கல்வியைப் புகட்ட வாதிட்டார்.

கலைகளையும் தொழில்களையும் வளப்படுத்தி நமது நாட்டில் செல்வ வளம் பெருக்கத் தக்க கல்வியைப் புகுத்திட விழைந்தவர் தியாகராயர். நமது கல்வி முறையிலே மாற்றம் ஏற்பட்டுத் தொழில் நுட்பக் கல்வி, தொடக்கப் பள்ளிகளிலும் இடைநிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்பட வேண்டுமென்று விரும்பியவர் அவர். பல ஆண்டுக்காலம் சென்னை மகாஜன சபையின் தீவிர உறுப்பினராக இருந்து தேசிய நலப்பணிகளுக்கு ஊக்க மூட்டிய சீலர் தியாகராயர்.

**அண்ணா போற்றிய அண்ணல்**

பேரறிஞர் அண்ணா அவர்களேகூட தியாகராயரின் சமூகப் பணிகளால் பெரிதும் கவரப்பட்டதுடன் அவரது சீரிய முயற்சியால்தான் தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார். *30.6.1950* அன்று திருவல்லிக்கேணியில் சர்.பிட்டி. தியாகராயரின் நினைவு நாள் கூட்டத்தில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அவரது உயரிய தன்மை பற்றி

"சர். தியாகராயர் தோன்றிய திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தலைமை பூண்டு அவர்களின் தன்னுணர்விற்கு வழிகோலி, அவர்களின் வாழ்வில் இருந்து வந்த அடிமைத் தனத்தை அகற்றப் பாடுபட்டுச் சமுதாயத் துறை, பொருளாதாரத்துறை, அரசியல்துறை ஆகியவற்றில் நல்லிடம் பெற்றிட உழைத்தார். நம்முடைய அடிப்படைக் கட்டடம் பலமாக இருக்க வேண்டும் என்றும் அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். இன்று நாம் வளர்ச்சி பெற்றிருப்பதற்கு மூல காரணம் யார்? நம் தியாகராயர். திராவிட இயக்கத்துக்குப் புத்துயிர் அளித்த பூமான் அவர்!"

எனத் தொடங்கிப் பலபடக் கூறிப் போற்றிப் புகழ்ந்தார்.

— பி.எல். ராஜேந்திரன்

## மேலான மே நாள்

அகில உலகமெங்கும் அகமகிழ்ந்து கொண்டாடப்படும் இம் மே தின விழாவை, கட்சி கருத்து வேற்றுமை இன்றி அனைவரும் கொண்டாடுவதைப் பற்றிப் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள், ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாளே இம் மே நாள்.





இம் மே நாள் சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும், கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைந்து, மகிழ பயன்படுகின்றது.

☆ **பாட்டாளி மக்களின் விடுதலை விழா மே தினம். நாடு அல்ல இதற்கு எல்லை! பாட்டாளிகள் வாழ்வுக்காக விடுதலைக்காக உரிமைக்காக மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது இந்தத் திட்டத்தையே மே தினம் எடுத்துக் கூறுகிறது!**

☆ **உலகம் மாயை இல்லை. உழைப்பவன் வாழ்வும் மாயமன்று. ஆனால், உழையாதவன் உல்லாசத்தில்தான் மாயம் இருக்கிறது.**

☆ **பாட்டாளி பாடுபட்டுக் கட்டுவது மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் போன்ற மனைகள், நான்கடுக்கு ஐந்தடுக்கு அரண்மனைகள். அவைகளை நிமிர்ந்து நோக்கினால் கழுத்து வலிக்கும். ஆனால், அவன் அண்டியிருப்பது குனிந்து நுழைய வேண்டிய குடிசை! ஏன் இந்தப் பேதம் நாட்டிலே எனச் சிந்திக்க வேண்டும்!**

☆ **வேலை, மனிதத் தன்மையை மாய்க்காத அளவு இருக்க வேண்டும்.**

# செய்திகள்... செய்திகள்... செய்திகள்...

திருப்பதி லட்டு ஒன்றைச் செய்ய ரூ.11 செலவாகிறது. 175 கிராம் எடையுள்ள இந்த லட்டு நான்கு ரூபாய்க்கு விற்கப் படுகிறது. ஆகவே, திருப்பதி வெங்கடாசலபதி கோயிலில் லட்டு விற்பனையால் ஏராளமாக நட்டம் ஏற்படுவதாகவும், இது சிறப்புத் தரிசனத்திற்காக விற்கப் படும் டிக்கட்டுகள் மூலமும் நன்கொடைகள் மூலமும் சரிக் கட்டப்படுகிறது என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

○ ○ ○

சென்னையைச் சேர்ந்த கிண்டியில் உள்ள 'கில்பர்ன் எலக்ட்ரானிக்ஸ் கம்பெனி' வளாகத்தில் 30 கிலோ எடை யுள்ள மலைப்பாம்பு ஒன்று பிடிபட்டிருக்கிறது. மலேசியக் காடுகளில் காணப்படும் இவ் வகை மலைப்பாம்பு இங்கே மூன்றாவது தடவையாகப் பிடி பட்டிருக்கிறதாம்!

○ ○ ○

விண்வெளியிலோ, சந்திரன் அல்லது செவ்வாய்க் கிரகத் திலோ வளர்க்கத் தக்க புதியரகக் கோதுமையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித் திருக்கின்றனர். (அபோஜி) எனப் படும் இந்த அதிசயக் கோதுமை, சாதாரணக் கோதுமையைவிட மூன்று மடங்கு பலன் தரக் கூடியது என்கிறார்கள்!

○ ○ ○

'ஜேம்ஸ் பாண்ட் 007' என்கிற கதாபாத்திரத்தை முக்கியமாக வைத்துத் துப்பறியும் புதினங்கள் எழுதிப் புகழ்பெற்ற 'இயன் பிளமிங்'கிற்கு இலண்டனில் அண்மையில்தான் பாராட்டு விழா நடைபெற்றது. இதி லென்ன வேடிக்கை தெரியுமா? அவர் இறந்து முப்பதாண்டுகள் ஆகின்றன.

○ ○ ○

தைவான் நாட்டில் ஆண் களின் ஆதிக்கம் அதிகம் இருக் கிறது; எல்லாவற்றிலும் ஆண் களுக்கே அதிகம் சலுகை காட்டப்படுகிறது. புகைவண்டி நிலையத்தில்கூட பெண்களுக்குப் போதிய கழிப்பறைகள் ஒய் வறைகள் இல்லை; இதைக் கண்டித்து, தைவான் நாட்டுக் கல்லூரி மாணவிகள் அண்மை யில் ஒரு நூதனப் போராட் டத்தில் இறங்கினார்கள்; ஆண்கள் ஒய்வறையிலும், கழிப் பறையிலும் போய்ப் புகுந்து அமர்க்களப்படுத்தி விட்டார்கள்.

○ ○ ○

அமெரிக்க மருத்துவக் கல்லூரிகளில் அண்மைக் கால மாக மாணவர்கள் சேர்க்கை அதிகரித்திருக்கிறது. இதன் காரணமாக அங்கே இந்திய பாகிஸ்தான் டாக்டர்கள் தேவை குறைந்துவிட்டது. தவிரவும், நோய்க்குச் சிகிச்சைப் பெறுவதை விட, நோய்வராமல் தடுக்கும் விழிப்புணர்ச்சி அமெரிக்க மக்களிடையே இப்போது வலுப் பெற்று வருகிறது.

○ ○ ○

சென்ற வாரக் கணக்குப்படி உலகமெங்கும் சுமார் ஒரு கோடி எய்ட்ஸ் நோயாளிகள் உள்ளனர்; இதில் 15 இலட்சம் பேருக்கு நோய் முற்றியுள்ளது; இவர்களில் 40 சதவிகிதத்தினர் பச்சிளங் குழந்தைகள். 2000 ஆம் ஆண்டில் நான்கு கோடிப் பேர் எய்ட்ஸ்சுக்கு ஆளாகக் கூடு மாம்!

○ ○ ○



அரசுத் துறையைச் சேர்ந்த கொச்சி கப்பல் கட்டும் நிறுவனம், சென்ற நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.124 கோடியை விற்பனை வருமானமாகப் பெற்றிருக்கிறது. ரூ.16 கோடியை நிகர லாபமாக ஈட்டியுள்ளது.

○ ○ ○

அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனுக்கு மிரட்டல் கடிதம் எழுதியதாக 13 வயது சிறுமிகள் இருவர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

○ ○ ○




அமெரிக்காவில் உள்ள சான்பிரான்சிஸ்கோவைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமி ஜெசிகா என்பவள் 11,000 கி.மீ. தூரத்திற்கு விமானம் ஓட்டிச் சாதனை படைக்கத்துடித்தாள். அவ்வாறே பறந்த அவள், தன்னோடு வந்த பயிற்சியாளரோடும், தந்தை யாருடனும் விமானம் புயலில் சிக்கியதால் மாண்டுபோனாள்.

○ ○ ○

இங்கிலாந்து செல்லும் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டனாக அசாருதீன் அறிவிக்கப்பட்டிருக்கிறார். இரண்டரை மாத காலம் சுற்றுப் பயணம் செய்யவிருக்கும் கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுவினர், தமது தலைவர் விசுவநாத் தலைமையில் கூடி அணிவீரர்களைத் தேர்ந்தெடுத்தனர். அப்போதுதான், அணியின் கேப்டன் பொறுப்பில் அசாருதீன் தொடர்ந்து நீடிப்பார் என்று முடிவெடுக்கப்பட்டது.

○ ○ ○

பிரிட்டன் மருத்துவ நிபுணர்கள், மரபு வழி மருத்துவ ஆராய்ச்சிக்கென 35 வயதுக்கு மேலான இரட்டையர்களாக இருப்பவர்கள் சிலரை 'வரலாம்' என அறிவித்திருந்தது; ஆயிரத்திற்கு மேலான இரட்டையர்கள் அதிலும் குறிப்பாகப் பெண் இரட்டையர்கள், ஒவ்வொரு ஜோடியினரும் ஒவ்வொரு வண்ண உடையோடு வந்து குவிந்ததைக் கண்டு மருத்துவர்களே பிரமித்துப் போனார்களாம்.

○ ○ ○

கிரிக்கெட் விளையாட்டில், உலகின் தலைசிறந்த 'ஆல் ரவுண்டர்'களில் ஒருவருமான இம்ரான்கான் 1992-இல் ஓய்வு பெற்றதும், லாகூரில் தன் தாயார் நினைவாகப் புற்றுநோய் மருத்துவமனை ஒன்று கட்டினார். இப்போது, புதிதாக பாகிஸ்தானில் ஒரு கட்சியும் தொடங்



கியிருக்கிறார் 'தாரிக் ஏ இன்சாப்' என்பது அதன் பெயர். நீதிக் கட்சி என்பது அதன் பொருள்.

○ ○ ○

அமெரிக்க விசா கோரி, அஞ்சல் மூலமே விண்ணப்பிக்கலாம் என்று சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அறிவித்திருக்கிறது. அமெரிக்க விசாகோரும் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதே இதற்குக் காரணமாகும்.

○ ○ ○

புகழ்பெற்ற பாப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் பிரான்சிஸ் நாட்டின் தலைநகரான பாரீஸ் அருகே ஒரு கோட்டையை 25 கோடி ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்; 15-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இக்கோட்டையில் 7 கோபுரங்கள் 82 அறைகள், ஓர் அகழி ஆகியவை இருக்கின்றன.

தொகுப்பு: பி.எல்.ஆர்.




"மிக இளைஞனாக இருக்கிறானே இவன்; நம் வழக்கில் முறை செய்வானா" என்று அஞ்சிய முதுமக்கள் இருவரின் மனம் நிலை கொள்ளுமாறு மாறுவேடம் தரித்து நியாயத் தீர்ப்பு வழங்கினான் கரிகாற் பெருவளத்தான். காவிரிக்குக் கரை அமைத்தவன், குறை காண முடியாதபடி அந்த வழக்குக்கும் முறை செய்து காட்டினான். அவ்வரலாறே எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்ட 'இலக்கியச் சோலை' திரைக் காவியத்தில் ஓர் அங்கமாய் மிளிர்ந்தது. இதோ அவ்வரலாறு:

**காட்சி 1**

(இடம்: கரிகாலனின் கவின்மிகு சோழநாடு.

உயர்ந்தோங்கிய ஆலய கோபுரங்களும், நெல்மணிகள் காய்த்துக் குலுங்கும் பொன் வயல்களும், சலசலக்கும் நீரோடைகளும் கண்ணுக்கு விருந்தாய்- எழிற்காட்சிகளாய் விரிகின்றன.

கரிகாற் பெருவளத்தானின் பெருமைகள் ஒலி முழக்கமாய் பின்னணியில் கேட்கிறது.)

**சேற்றால் மடையடைக்காமல்**
**சோற்றால் மடையடைக்கும்**
**சோழ வள நாடு...**

**அகிலமெங்கும் அறிவியல் தோன்றாத காலத்தில் ஆற்றுக்கு அணைகட்ட முடியும் என்ற பொறியியல் அறிவை முதன்**

முதலில் கண்டவன் யார் தெரியுமா?

இந்தக் கரிகாற் பெருவளத்தான்!

காவிரிக்குக் கல்லணை அமைத்தான். தன் இள வயதிலேயே நடுநிலை மாறாத நெறிமுறை வகுத்தான்.

மன்னன் எப்படியோ மக்களும் அப்படிதான்.

அறம் மாறிச் சென்றதும் இல்லை; அடுத்தவர் பொருளைக் கொண்டதும் இல்லை.

கலப்பை மேலே போகாமல் இடறுகிறது. காளைகளை முடுக்குகிறார் நன்னர். இருந்தும் அக்காளைகளால் தொடர்ந்து செல்ல இயலவில்லை.)

**நன்னர்:** என்ன இது சிக்குகிறது... ஆங்... புதையல்...

ஆஹா!... புதையல்... புதையல்... ஏய் புதையல்.

(இருவர் ஓடி வருதல்)

**ஒருவர்:** புதையலா...வா வா.. என்ன வென்று பார்ப்போம்!

## பங்கு பெற்ற கலைஞர்கள்

நடிகர்கள் : கார்த்திக்
சண்முகசுந்தரம்
இராஜசேகர்
சுகுமார்
மணிமாறன்

ஒப்பனை : முத்தப்பா

உடைகள் : ஆசிர்வாதம்

கலை : தோட்டா தரணி

படத் தொகுப்பு : பி.எஸ். நாகராஜ்

வசனம் பாடல்கள் : புலவர் புலமைப்பித்தன்

ஒளிப்பதிவு : அப்துல் ரஹ்மான்

இசை : விஸ்வநாதன்-இராமமூர்த்தி

தயாரிப்பு ஒருங்கிணைப்புக் குழு:
எஸ்.பி. முத்துராமன், ரமேஷ் பிரசாத்

தயாரிப்பு பொறுப்பு:
எம். சரவணன்,
எம். பாலசுப்பிரமணியம்,
எம்.எஸ். குகன்

தயாரிப்பு: இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
தமிழ்நாடு அரசு

திரைக்கதை - இயக்கம்:
ஆர்.வி. உதயகுமார்

இது இந்த மண்ணோடு பிறந்த பண்பாடு.

(காட்சி முடிவு)

### காட்சி 2

(**இடம்:** தஞ்சையின் பொன்கொழிக்கும் ஒரு நஞ்சை)

**பாத்திரங்கள்:** நன்னர், உடன் பணியாற்றும் இருவர்.)

(ஏர்பூட்டி வயலில் உழுது கொண்டிருக்கிறார் நன்னர். திடீரென ஓரிடத்தில்

**நன்:** பொற்குடம் கிடைத்திருக்கிறது. அய்யா!

**ஒருவர்:** பொற்குடமா?

**மற்றவர்:** நன்னரே, நீர் கொடுத்து வைத்தவர்!

**இருவரும்:** பொன்னரது நிலத்தை நீங்கள் வாங்கின உடனேயே உங்களுக்குப் புதையல் கிடைத்திருக்கிறது. பார்த்தீர்களா?

**நன்:** ஊஹூம்! நேற்று வரை இந்த நிலம் பொன்னருக்குத்தான் சொந்தம். இல்லை... இந்தப் புதையல் என்னுடையதல்ல. இது பொன்னருக்கே உரிமையானது.



காட்சி 3

(இடம்: பொன்னரின் இல்லம்)

**பாத்திரங்கள்:** நன்னர், பொன்னர்)

(வயலில் கிடைத்த புதையல் தனக்கு உரிமையானதில்லை என்றும், அது பொன்னருக்கே சொந்தமானது என்றும் கூறுகிறார் நன்னர். அதற்குப் பதில் அளிக்கிறார் பொன்னர்.)

**பொன்னர்:** இல்லை.. இல்லை... எப்பொழுது அந்த நிலத்தை நான் உங்களுக்கு விற்றுவிட்டேனோ அப்போதி லிருந்து அது உங்களுடையதுதான். அதிலிருந்து கிடைக்கும் எதுவும் உங்களுக் குரியது தான்.

**நன்:** இதில் தங்க நாணயம் பொற்குவியல் இருக்கிறது. நான் விலை கொடுத்தது மண்ணுக்கு மட்டும் தானே? ஆனால் எனக்கோ புதையலில் பொன் கிடைத்து இருக்கிறது பொன்னரே!

**பொன்:** அந்த மண்ணில் கிடைக்கும் எதுவாயினும் அது உங்களுக்குத்தான் சொந்தம். அது உங்கள் நல் மனதுக்குக் கிடைத்த பரிசு.

நீங்களே எடுத்துச் சொல்லுங்கள்.

**நன்:** இல்லை... இல்லை... இது உங்களுக் குத்தான்

**பொன்:** இல்லை... இல்லை... இது உங்களுடையதுதான்

**நன்:** நமக்குள் வாதம் வேண்டாம். இந்த வழக்கை மன்னர் கரிகால் வளவன் மன்றத்துக்கு எடுத்துச் செல்வோம்.

**பொன்:** அதுவும் சரிதான். தீர்ப்பை அவரே சொல்லட்டும்.

காட்சி 4

**(இடம்:** மாமன்னன் கரிகாலனின் அரசவை)

**பாத்திரங்கள்:** கரிகாலன், நன்னர், பொன்னர், அவையோர்.)

**கரிகாலன்:** நீங்கள் கொண்டு வந்துள்ள இந்த வழக்கு மிகவும் புதுமையானது. ஒரு பொன் புதையலையே எனக்கு உரியது அல்ல, எனக்கு உரியது அல்ல என்று இருவருமே கூறிக் கொள்கிறீர்கள். ஒருவகையில் பார்த்தால் இந்தப் புதையல் பொன்னருக்கு உரியதோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஏனெனில் நிலத்திற்கு முதல் உரிமையாளர் பொன்னர் தானே...

**பொன்:** இல்லை... இல்லை...



**கரி:** இன்னொரு வகையில் பார்க்கும் போது இந்தப் புதையல் நன்னருக்குத்தான் உரியதோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

**நன்:** இல்லை... இல்லை

**கரி:** ஏனென்றால் அந்த நிலத்திற்கு இப்பொழுது உரிமையாளர் நன்னர்தானே..

**நன்:** ஊஹூம்.

**கரி:** உம். குழப்பமாக இருக்கிறதே...

**நன்:** இவர் மிகவும் குழம்பிப் போயிருப்பதால் சரியான தீர்ப்பு நமக்குக் கிடைக்குமா?

**பொன்:** இளம் வயது. சரியான தீர்ப்பு வரும் என்று எனக்குத்தான் தோன்றவில்லை.

**நன்:** இப்போது என்னதான் நடக்கும்?

**பொன்:** பொறுத்திருந்து பார்ப்போம்.

**வயலில் ஏர் உழும்போது கிடைத்த புதையலைத் தன்னுடையது அல்ல என்று வழக்காடிய நல் மனமுடைய உழவர்கள் இருவருக்கு, அவர்களே ஏற்றுக் கொள்ளும் வகையில் நல்ல தீர்ப்பு வழங்கிய இளம் வயது கரிகாலனின் அறிவுத்திறன்.**

**கரி:** அமைச்சரே...

(அமைச்சர் எழுந்து நிற்க)

**கரி:** உம்.. அமைச்சரே

**அமைச்சர்:** அரசே

(அமைச்சர் அருகில் வருகிறார். அவரிடம் மெல்லிய குரலில்...)

**கரி:** அவர்கள் இருவரும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று தங்களுக்குப் புரிகிறதா?

**அமை:** புரிகிறது அரசே. தாங்கள் வயதில் இளையவர்.

**கரி:** வழக்கோ புதியது

**அமை:** அதனால்...

**கரி:** உம்.

**அமை:** தங்களால் சரியான தீர்ப்பு வழங்க முடியுமோ முடியாதோ என்று அவர்கள் இருவருக்கும் ஐயம்.

**கரி:** ஐயமா?

**அமை:** அப்படித்தான் தோன்றுகிறது அரசே!

**கரி:** சரி. நீர் சென்று உமது இருக்கையில் அமரும்.

**அமை:** ஆகட்டும் அரசே!

**கரி:** (உரத்த குரலில்...) அவையோரே... நானோ வயதில் இளையவன். இந்த வழக்கோ மிகவும் சிக்கலானது. அறநூல்கள் பலவும் கற்ற என் தாய்வழிப் பாட்டனார் ஒருவர் இருக்கிறார். அவர் வந்து இந்த வழக்கில் தீர்ப்புக் கூறட்டும். உம். அதுதான் நல்லது. நாளை இந்த அவை கூடட்டும்.

### காட்சி 5

(**இடம்:** நன்னர் பொன்னர் இல்லங்களுக்கு இடையே ஓர் இடம்)

**பாத்திரங்கள்:** நன்னர், பொன்னர்.

(இருள் தன் கட்டுக்குலைந்து ஒளிவெள்ளம் எங்கும் மெல்லப் பரவும் இளங்காலைப் பொழுது. நன்னரும் பொன்னரும் நடுவழியில் சந்திக்கின்றனர்.)

**நன்னர்:** பொன்னரே... என்ன சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்?

**பொன்னர்:** இல்லை.. இல்லை.. அந்தப் பெரியவர் வந்து நமக்கு என்ன தீர்ப்புச் சொல்லப் போகிறாரோ என்றுதான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன்.

**நன்:** நிச்சயமாக அந்தப் பெரியவர் வந்து நமக்கு நல்ல தீர்ப்பைத்தான் வழங்குவார் என்கிற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

**நன்:** பார்த்துக்கொண்டே இருங்கள். அந்தப் புதையல் உமக்குத்தான் சொந்தமாகப் போகிறது.

**பொன்:** ஊஹூம்

**நன்:** பார்க்கத்தானே போகிறீர்கள். அந்தப் புதையல் உம்மைத்தான் சேரப் போகிறது. அவையில் வந்து பாருங்கள். வாருங்கள்.

**பொன்:** சரி வாருங்கள். போகலாம்.

### காட்சி 6

(**இடம்**: மன்னன் கரிகாலன் மாமன்றம்)

**பாத்திரங்கள்:** கரிகாலன், நன்னர், பொன்னர் மற்றும் அவையோர்.)

(கரிகாலன் முதுமைக் கோலத்தானாக மாறுவேடம் பூண்டு நடுவராக அமர்ந்து வழக்கினைக் கேட்கிறான். வந்திருப்பது கரிகாலன்தான் என்பதை அறியாமல் நன்னரும் பொன்னரும் தங்கள் வழக்கை எடுத்துரைக்கின்றனர். அவையோரும் மாறுவேடம் பூண்டிருப்பது தங்கள் மன்னனே என்று அறியாமல் நடவடிக்கைகளைக் கவனிக்கின்றனர்.)

**கரி:** இதுவரை வழக்கில் வராத வழக்கு. இந்த வழக்கைக் கேட்பதே மகிழ்ச்சி. பொன்னரே, நீர் என்ன சொல்கிறீர்கள்?

**பொன்:** நன்னருக்கு நான் நிலத்தை எப்போதோ விற்று விட்டேன். என்னிடத்தில் நிலம் இருக்கும் போது அங்கே புதையல் எதுவும் இல்லை. ஆகையால் அது எனக்கு உரியது ஆகாதய்யா.

**கரி:** இருக்கட்டும். நன்னர் என்ன சொல்லுகிறார்?

**நன்:** அய்யா, இவர் சொல்வது தவறு. அப்போதும் புதையல் இருந்திருக்கிறது. இருந்தது இவருக்குத் தெரியவில்லை. இப்போது இருக்கிறது என்பதால் அதை நானோ புதைத்து வைத்தேன்?

**கரி:** அப்படியென்றால் அதை நீங்களும் ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள்.. உம்..?

**நன்:** அய்யா, பிறர் பொருளை என்னுடையது என்று எப்படி நான் ஏற்றுக் கொள்ளுவது அய்யா?

**பொன்:** இப்போது எனக்கும் இது பிறர் பொருள்தான். தான் மட்டும் ஏற்றுக் கொள்வேனா?

**கரி:** அது இருக்கட்டும்.. உங்கள் இருவருக்கும் மக்கள் இருக்கிறார்களா?

**இருவரும்:** இருக்கிறார்கள்.

**பொன்:** எனக்கு ஒரு மகள்.

**நன்:** எனக்கு ஒரு மகன்.

**கரி:** அவர்கள் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தால்?

**நன்:** திருமணத்திற்கும் இந்தத் தீர்ப்புக்கும்...

**கரி:** என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா? சொல்லுகிறேன். முதலில் உங்கள் இருவருக்கும் இந்த திருமணத்தில் விருப்பம் உண்டா?

**பொன்:** உண்டு.

---

**உரைமுடிவு காணான் இளமையோன் என்ற**
**நரைமுது மக்களுவப்ப - நரைமுடித்துச்**
**சொல்லால் முறை செய்தான் சோழன்.**

- பழமொழி

---

**கரி:** அப்படியென்றால் வழக்கு முடிந்து விட்டது. நீங்கள் இருவருமே புதையல் என்னுடையது அல்ல, என்னுடையது அல்ல என்று கூறிக் கொள்கிறீர்கள். அதனால் உங்கள் இரு பிள்ளைகளுக்கும் திருமணத்தை முடித்துவிட்டு, அவர்களுக்கு இந்தப் புதையலைப் பரிசாகக் கொடுத்து விட்டால் இருவருக்குமே பொதுவில் என்று போய் விடும். என்ன நினைக்கிறீர்கள்?

**நன்:** ஆஹா. ஐயா, இது நல்ல தீர்ப்பு அய்யா.

**பொன்:** மிக நல்ல தீர்ப்பு.

(தங்கள் இருவருக்கும் உகந்த வகையில் நியாயம் மாறாமல் தீர்ப்பு வழங்கப்பட்டதை ஏற்று நன்னரும் பொன்னரும் பெரிதும் மகிழ்ந்து கட்டி அணைத்துக் கை குலுக்கி

மகிழ்கின்றனர்.

கரிகாலன், தான் புனைந்திருந்த பொய் முடியையும் சூடியிருந்த வெண்தாடியையும் களைகின்றான். மகத்தான தீர்பபை வழங் கியது மாறுவேடம் பூண்ட தங்கள் மாமன்னனே என்றறிந்து அவையில் கூடியிருந்தோர் எழுந்து நின்று ஆரவாரம் செய்கின்றனர்.)

**கரி:** என்ன பார்க்கிறீர்கள்? வியப்பாக இருக்கிறதா? அமருங்கள்.

(அனைவரும் அமர்கின்றனர்.)

உருவு கண்டு எள்ளாதீர். ஒருவனின் அறிவைத் தள்ளாதீர். நிலவுக்குக் குளிரவும், நெருப்புக்குச் சுடவும், ஆற்றுக்கு ஓடவும், காற்றுக்குப் பாடவும் கற்றுத்தர தேவை யில்லை.

நல்லதைக் கொள்ளவும், தீயதைத் தள்ளவும், நெறி முறை காணவும், நீதி கூறவும் இந்த மண்ணில் பிறந்த யாருக்கும் சொல்லித் தரவும் தேவையில்லை. போரிலே மறம், வாழ்விலே அறம், நெஞ்சிலே உரம், நேர்மைத் திறம் இவையனைத்தும் நம்மோடு பிறந்தவை- நம் குருதியிலே கலந்தவை.

நீதிக்காகவே பிறந்து, நீதிக்காகவே வாழ்ந்து, நீதிக்காகவே உயிர்த் தியாகம் செய்யும் இனம் நமது தமிழ் இனம். நான் என்னுடையது என்ற வழக்காடும் உலகில் ஒரு பொன் புதையலையே என்னுடையது அல்ல என்று வழக்காடும் வழக்கு வேறே எங்கேனும் உண்டா?

இந்தச் சோழ வள நாட்டில் தாழாத கொடியும், சாயாத குடையும், வளையாத செங்கோலும், வணங்கா முடியும் நிலை பெற்றிருப்பது ஒரு மன்னரை மட்டும் நம்பி அல்ல. இந்த நாட்டு மக்களையும் நம்பித்தான்.

நாம் கொடுத்தறிந்தவர்களேயன்றி, எடுத்தறியாதவர்கள் என்று இந்த உலகத்திற்கு உணர்த்திய உங்களை வாழ்த்துகிறேன். இந்நாடு நன்னாடு. எழில் மிகுந்த பொன்னாடு இந்தச் சோழ வளநாடு. இந்த மண்ணில் பிறந்ததை விடப் பேறு வேறு எனக்கு ஏது? நானல்ல மன்னன். இந்த நாட்டு மக்கள் அனைவருமே எனக்கு மன்னர்.

இந்தக் கரிகாலன் உங்களுக்குக் காவலன் மட்டுமே.

(காட்சி முடிவு)

**ஆம்!**

**இவன் மகுடம் சூட்டிய மன்னன்**

**ஆனால் மக்களுக்கோ தொண்டன்.**

—திரை

---

**மனிதன் தானாக உழைத்துப் பழகிக் காய்த்துப் போயிருக்க வேண்டும். இன்ப நுகர்ச்சியிலும், மகிழ்ச்சியிலுமே ஆழ்ந்திருக்கக் கூடாது. அவை உடலுக்கும் நன்மை செய்வதில்லை. அறிவுக் கும் உதவுவதில்லை.**

**—சாக்ரடீஸ்**

**கடினமான நிலத்தில் ஏர் கட்டி உழுவோரிடமும், சாலை அமைக்க சரளைக் கல் உடைப் போரிடமும், இறைவன் இருக் கிறான். அவர்களுடன் அவன் மழையில் நனைகின்றான் வெயிலில் உலர்கின்றான். அவனைப் போல நீங்களும் புழுதியில் இறங்கி வாருங்கள். நெற்றி வியர்வை விழ உழைத்து உங்கள் இறைவனைக் கண்டு கொள்ளுங்கள்.**

**—கீதாஞ்சலியில் தாகூர்**

**நான் வாழ்வதற்காக மற்ற வர்களை உழைக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் உழைக் காமல் வாழ முடியும் என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ, அங்கே அடிமைத்தனம் நிச்சயமாக இருக்கும்.**

**—டால்ஸ்டாய்**

### தமிழ் நாடக மலர்

வெளியீடு:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி,
சென்னை 600 113

பக்கம்: 192 விலை: ரூ.60

முத்தமிழில் ஒன்றாகக் கருதப் படுவது நாடகத் தமிழ். சமுதாயத்தைச் சீர்திருத்தும் சாதனங்களில் நாடகத்திற்கு முக்கிய இடமுண்டு. இக்கலையின் தோற்றம் தொல்காப்பியர் காலத்திலிருந்தே தொடங்குகிறது; இதன் பெருமை பண்டைக் காலத்திலிருந்தே பறைசாற்றப்பட்டு வருகின்றது; இதன் அருமை இக்காலம் வரை தொடர்கின்றது. இதன் அருமை பெருமைகளையெல்லாம் ஒரு சேரத் தொகுத்து, தமிழ் அன்னைக்கு மாலையாய்ச் சூட்டி மகிழ்ந் திருக்கின்றது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இந்த நூலில், தமிழ் நாடக முன்னோடிகளின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. சங்கரதாஸ் சுவாமிகள், பேரறிஞர் அண்ணா, தெ.பொ. கிருஷ்ணசாமிப் பாவலர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், தமிழ்த் தென்றல் திரு.வி.க. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் இப்படி நாடகத்துறைப் பேராசிரியர்கள் பலரின் கட்டுரைகள் இந்நூலை அலங்கரிக்கின்றன.

மொத்தம் 45 கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகின்றன. நாடக ஆர்வலர்கள் இந்நூலைப் பயன் படுத்திக்கொள்ளலாம்.

—பொன். மறைமலை

### 7 உலக அதிசயங்கள்

ஆசிரியர்: அ. ஜெய்குமார்




வெளியீடு:

மருதம் பதிப்பகம்
59, ஆம் தெரு,
சென்னை - 600 004

பக்கம்: 20 விலை ரூ.120

உலக அதிசயங்கள் எத்தனை என்றால் ஏழு என்று கூறி விடுவோம். ஆனால், அவை என்னென்ன என்பது மட்டும் நம் நினைவுக்கு வருவதில்லை. அவற்றை நினைவுபடுத்துகின்றது இந்நூல். கற்காலம், மத்தியக் காலம், தற்காலம் என மூன்று வகையாகப் பிரித்து உலக அதிசயங்களை நம் கண் முன் கொண்டு வருகிறார் நூலாசிரியர்.

மேற்போக்காக இல்லாமல், ஒவ்வொரு அதிசயம் குறித்தும் விளக்கமான படங்களுடன் கொடுத் திருப்பது பாராட்டுக்குரியது. எல்லாத் திறத்தாரும் தெரிந்து கொள்ள வேண்டிய கருத்துக் கருவூலம் இது.

—பி.வி.ஜி.

### திருமுறை இலக்கியம்

ஆசிரியர்:

முனைவர் சோ.ந. கந்தசாமி

வெளியீடு:

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி
சென்னை - 600 113

பக்கம்: 256 விலை: ரூ.50

சங்க கால வாழ்க்கை முறைகளை விளக்கிட சங்க இலக்கியம் உதவியது போலவே, இடைக்காலச் சமுதாய வரலாற்றை விளக்கிட திருமுறை இலக்கியம் உதவுகின்றது.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்த காரைக்காலம்மையார் முதல், கி.பி. 12-ஆம் நூற்றாண் டினராகிய சேக்கிழார் வரை இருபத்தெழுவர் பாடிய, பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட பைந்தமிழ்ப் பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

திருமுறைகளால் பெற்ற பயன்கள் பலப்பல. தமிழிசை வளரவும், சிற்பக்கலை சிறக்கவும், ஓவியக் கலை உன்னத நிலை டையவும் இவை வழிவகுத்தன. இதனால் தமிழ்ப்பற்று வளர்ந்தது. தமிழ்ப் பண்பாடு தழைத்தது.

திருமுறை ஆசிரியர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற ஆசிரியப் பெருமக்கள் பாடிய தெய்வ மணங்கமழும் பாடல்களின் இனிமையை நூல் முழுவதும் பார்க்கிறோம். அந்தப் பாக்கள் எல்லாம் தேன் பலாச் சுளைகள். படிக்கப் படிக்க வாய் மணக்கும், பக்திப் பரவசம் நம் ஊனில் உயிரில் பரவும். அத்தகைய திருமுறைப் பாடல்களைப் பகுத்தும் தொகுத்தும் தந்துள்ளார் நூலாசிரியர். திருமறைச் செந்தமிழ், திருமுறையில் இயற்கை, கற்பனை முதலான தன்மைகளை ஆய்வு நோக்கோடு கூறியிருப்பது, தமிழ் ஆர்வலர்களின்

நெஞ்சுக்கு நிறைவைத் தருகின்றது. படித்துப் பயன்பெறத்தக்க கருவூலம் இது.

—பி.வி. கிரி

### நாலடியார்

உரையாசிரியர்:
ஞா. மாணிக்கவாசகன்

வெளியீடு:
உமா பதிப்பகம்,
58, ஐயப்ப செட்டித் தெரு,
சென்னை 600 001

பக்கம்: 166 விலை: ரூ15

'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பது ஆன்றோர் வாக்கு. நான்கு அடிகளால், இந்த நாநிலத்தையே அளந்து, நன்மக்களாக வாழும் வழிமுறைகளைக் கூறும் வாழ்க்கை நெறி நூலே நாலடியார்.

உதாரணங்கள்- உவமைகள்- கற்பனைகள் எல்லாம் இப் பாடல்களில் இழைந்தோடக் காண லாம். பொருளும், சொற்சுவையும் மிகுந்த பாடல்களின் தொகுப்பாக இனிய எளிய உரையுடன் அழகுறத் தயாரிக்கப்பட்டிருக்கிறது இந்நூல்.

—பொன். மறைமலை

### வெளிச்சம் வருகிறது

ஆசிரியர்: கலைமாமணி ஏர்வாடி
எஸ். இராதாகிருஷ்ணன்

வெளியிட்டோர்:
சுதா பதிப்பகம்
4, முத்து முதலி தெரு,
புரசைவாக்கம்,
சென்னை - 600 007.

பக்கம்: 160 விலை: ரூ.30

வெளிச்சம் வருகிறது எனும் கவித்திரட்டில், தென்பட்ட சில ஒளிக்கற்றைகள் இவை:

"அறிவாற்றல் தனைவளர்த்து
அவனியெங்கும்
அறிவினது வெளிச்சத்தைப்
பரவச் செய்வோம்!"

(பக்கம் 136), "கல்லாமை என்பதொரு இருட்டே யானால், கண்ணிலொரு வெளிச்சமிங்கே கல்வி தானே!" (பக்கம் 134), "பசுவதை நாட்டில் பாவமாய் ஆனா, பசிவதை பற்றியேன் பேச்சையே காணோம்?" (பக்கம் 127).

கவிதைகள் கைகோத்து, கனவுலகில் வலம்வந்து, சமுதா அவலங்களைக் கனக, விஜயர்போல் தலை சுமந்து, வெளிச்சமாய் வருகிறது. வெளிச்சமாய் தெரிகிறவர் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன். தமிழ்ப் புவிதனில் கவிவேள்வி புரிபவர். கவிதை எனக்குப் பொழுது போக்கல்ல என்று இவர் சொன்னாலும், கவி, விதைகளைத் தூவி விட்டுள்ளார். ஏனெனில் காலமே இவற்றை வளர்த்துக் காக்கும். கருத்தாழமும், வடிவழகும் வாய்ந்த இக்கவிதைத் தொகுப்பு தமிழ்கூறு நல்லுலகில் விழுதுவிட்டு, வேர் பரப்பி, தமிழ்த்தாய்க்குத் தண்ணிழல் கொடுக்கும் தகத்தன. படிக்கத் தூண்டும், படித்தப் பின்னும் நினைக்கத் தூண்டும் பண்பின.

—எம்.வி.எம். அசோகன்

### கவண் கற்கள்

ஆசிரியர்: எல். மோகனப்பிரியன்

வெளியீடு:
கிறிஸ்துவ இலக்கியச் சங்கம்
த.பெ.எண் 501, பார்க் டவுன்
சென்னை - 600 003.

பக்கம்: 72 விலை: ரூ.25

கிறிஸ்துவ வரலாற்றை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட இந்நூலில் கோக்கப்பட்டிருக்கும் கவிதை மலர்கள் நம் மனமெங்கும் மணம் வீசுகின்றன. கவிஞரின் சிந்தனை வானில் சிறகடிக்கும் ஒவ்வொரு கவிதையும், புதுக் கவிதைக்கு ஒரு புது இலக்கணம்.

'சிலுவை எனக்குப் போதி மரம்' என்ற கவிஞரின் உயரிய பார்வையில் சிதறிய சிந்தனை சிறப்புக்குரியது.

இந்துக் கிளிக்களும்
முஸ்லீம் கொக்குகளும்
கிறிஸ்துவப் புறாக்களும்
கட்டிய கூடுகளைக் கண்டுபிடித்துக்
கலைக்க முடியுமா?
வர்ணங்கள் வேறு
ஓவியம் ஒன்று

—என்ற ம(னி)த நேயப் பார்வை புதுக் கவிதையில் ஒரு புதிய பரிமாணம்.

'கவண் கற்கள்' கவின் கற்கள் போல் மிளிர்ந்து, படிப்போரின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அமைந்திருக்கிறது.

—சுந்தர்ஜி



எவ்வளவு செல்வமும் கல்வியும்
இருந்தாலும் சரி; அடக்கம் இல்லையேல்
பண்பாடு இல்லை; அதற்கெல்லாம் மதிப்பில்லை!

—முதறிஞர் இராஜாஜி

# தமிழ் வளர்த்த பெரியார்:


# மயிலை சீனி வேங்கடசாமி

**த**மிழ்ப் பண்பாட்டுக்கு ஓர் சான்றாக, நடுநிலைமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக, வள்ளுவர் வழிவந்த அறிஞராக விளங்கியவர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள்.

இவர் **16.12.1900** அன்று பிறந்தார். தந்தை மயிலை சீனிவாச நாயகர். நாட்டு மருத்துவரான இவர், தமிழார்வம் மிக்கவராகவும் விளங்கினார். திருக்குறள், நாலடியார், தேவாரம், திருவாசகம், திவ்வியப்பிரபந்தம், இராமாயணம், பாரதம் என்று பல நூல்களைக் கற்றவர்.

சீனி. வேங்கடசாமி அவர்களுக்கு, நாட்டு மருத்துவராக வர வேண்டும் என்று விருப்பம் இருந்தது. தந்தையார் மருந்துகளைத் தயார் செய்யும்போது உடனிருந்து கவனித்து வந்ததால், இந்த ஆர்வம் அவருக்கு இருந்து வந்ததில் வியப்பில்லை. என்றாலும், சீனி. வேங்கடசாமி அவர்கள், தமிழ் இலக்கியத்திலேயே முக்கியக் கவனம் செலுத்தினார். இதற்குக் காரணம், இவருடைய தமையனார் திரு சீனி. கோவிந்தராஜன் அவர்களாவார். இவர் நல்ல தமிழ்ப் புலவர். மகாவித்துவான் சண்முகம் பிள்ளையவர்களிடம் தமிழ் படித்தவர்

இளமையில் இவர் திவ்வியப் பிரபந்தம், தேவாரம் ஆகிய பாடல்களை மனப்பாடம் செய்வார். திருவாசகம், இராமாயணம், பாரதம், நன்னூல் முதலிய



நூல்களை ஐயந்திரிபறக் கற்றவர். தமையனாரின் தமிழார்வம் தம்பிக்கும் தொற்றிக் கொண்டது. அப்போது சீனி. வேங்கட சாமி அவர்களுக்குப் பதினாறு வயதே ஆகியிருந்தது. இலக்கியங்களைப் படிக்கும் ஆர்வம் அப்போது அவருக்கு மேலோங்கி இருந்தது.

> **மயிலை சீனி.வேங்கடசாமி அவர்களின் நினைவு நாள்:**
> மே - 8

அத்துடன் ஓவியக் கலையிலும் அவருக்குப் பயிற்சி இருந்தது.

காலப்போக்கில், சீனி. வேங்கடசாமி அவர்கள் நாலடியாரைக் கற்பதில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். நாலடியாரின் சொற்சுவையும் பொருட்சுவையும் இவரை வெகுவாகக் கவர்ந்தன. அத்துடன் சிறுபஞ்சமூலம், திரிகடுகம், ஏலாதி ஆகிய நூல்களையும் கற்றுத் தேர்ந்தார்.

சீனி. வேங்கடசாமி அவர்களுக்கு 22 வயதிருக்கும். அப்போது அவரது தமையனார் சீனி. கோவிந்தராஜன் காலமானார். சீனி வேங்கடசாமிக்கு குடும்பத்தைக் காப்பற்ற வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. சீனி. வேங்கடசாமி, மோட்டார் வண்டிச் சாமான்கள் விற்கும் கடையில் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். இதயம் இலக்கியத்தை நாடியபோது இருப்புச் சாமான்கள் மீதா பற்று ஏற்படும்? அவருக்கு அந்த வேலை பிடிக்கவில்லை.

விரைவிலேயே அவருக்கு பிடித்த வேலை ஒன்று கிடைத்தது. ஆம். நீதிக்கட்சியினர் 'திராவிடன்' என்னும் பெயரில் ஒரு நாளிதழைத் தொடங்கியிருந்தனர். அந்த நாளிதழின் ஆசிரியர்

குழுவில், ஓர் உறுப்பினரானார் சீனி. வேங்கடசாமி அவர்கள்.

பத்திரிகைத்துறை அவருக்குப் புதிய அனுபவங்களைக் கற்க உதவியது. செய்தி திரட்டு தலிலிருந்து கட்டுரைகள் எழுதுவது வரை உற்சாகத்துடன் செய்து வந்தார். ஆனால், அங்கும் அவருக்குப் போதிய ஓய்வு கிடைக்கவில்லை. அவர் மனத்தில் தமிழாராய்ச்சியே தலைதூக்கி யிருந்தது. அதற்குத் தகுந்த வேலை எது? என்று தேடிக் கொண்டிருந்தார்.

அப்போது, ஆசிரியர் தொழிலே உகந்தது என்று அவருக்குத் தோன்றியது. பிறகு தொடக்கப் பள்ளி ஆசிரியர் பயிற்சியில் சேர்ந்து வெற்றி பெற்றார். சென்னை மயிலாப்பூர் நகராண்மைக் கழகப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

இலக்கிய ஆராய்ச்சி தொடர்ந்தது. அவருடைய கட்டுரைகள் பல இதழ்களில் வெளிவந்தன. படித்தவர்கள் பலர் பாராட்டி னார்கள். அவ்வமயம் திருநெல் வேலி கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர்களின் நட்பால் தமிழாராய்ச்சி தடையின்றி வளர்ந்தது.

தனித் தமிழ்த் தந்தை மறை மலையடிகளாரிடம் தனி மதிப்பு வைத்திருந்தார் சீனி. வேங்கட சாமி அவர்கள். அவரது நூல்கள், இவரது தணியாத தமிழ்த் தாகத்துக்குக் குளிர்ந்த நீராய் உதவின.

தமிழ்த் தென்றல் திரு.வி.க. வின் நட்பு இவரது இலக் கியச்சோலையில் தென்றலாய் வீசியது. மயிலை சீனி. வேங்கட சாமி அவர்கள் எழுதிய "இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள்" என்னும் நூலுக்கு அழகிய அணிந்துரை நல்கிப் பாராட்டினார் திரு.வி.க.

பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள், சென்னைத் தமிழ்ச் சங்கம் என்னும் இலக்கிய அமைப்பை உருவாக்கி, பல அரிய சொற் பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்தச் சொற் பொழிவுக் கூட்டங்களுக்குத் தவறாமல் செல்வார் சீனி. வேங்கடசாமி. அதன் விளைவாக உருவானவையே 'கிறிஸ்துவமும் தமிழும்', 'பௌத்தமும் தமிழும்', 'சமணமும் தமிழும்' ஆகிய ஆராய்ச்சி நூல்கள். அத்துடன் தெ.பொ.மீ.யின் நட்பு அவருக்குக் கிடைத்ததைப் பெரும் பேறாகக் கருதினார். அவரிடம் பாடம் கேட்கும் வாய்ப்பும் இவருக்குக் கிடைத்தது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் நடத்தி வந்த 'குடியரசு' பத்திரிகையைத் தவறாமல் படித்து வந்ததுடன், அதில் கட்டுரைகளும் எழுதினார். இது, தந்தை பெரியாருக்கும், சீனி. வேங்கடசாமி அவர் களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. தந்தை பெரியாரின் மூலம் பாவேந்தர் பாரதிதாசன் இவருக்கு அறிமுகமானார்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் இலக்கியப் பயணம் தங்கு தடங்கலின்றி நடந்தது. அவரது அயராத உழைப்பின் காரணமாக, பல நூல்கள் வெளிவரத் தொடங்கின. தமிழறிஞர்களின் தொடர்பு, அவருக்குப் பலவகையிலும் பெருந்துணையாக இருந்தது. ஏட்டுச் சுவடிகள், சாசனங்கள் முதலானவற்றை ஆராய வழி வகுத்தது. விடுமுறை நாட்களில் இவர் வாளா இருந்ததில்லை. காலம் பொன் போன்றது என்பதைக் கவனத்தில் கொண்டு செயல்பட்டு வந்தவர். கோவில்கள், சிற்பங்கள், கல்வெட்டுக்கள் என்று ஊர்ஊராகப் பார்க்கப் போய்விடுவார். அவை குறித்து

## பொன்மொழிகள்

**மாணவர்களிடையே வேகம் தேவைதான், அது ஏற்படுவது இயற்கைதான் என்றாலும், அந்த வேகம் வகைப் படுத்தப்பட வேண்டும் முறைப் படுத்தப்பட வேண்டும் கல்வியின் தன்மையே வேகத்தை முறைப் படுத்தி வகைப்படுத்துவதுதான்.**

**—அறிஞர் அண்ணா**

**நாட்டின் வலிமை நமது ஒற்றுமையால் மட்டும் அமைந்து விடாது நாளைய தினம் நம் கடுமையான உழைப்பால் உருவான முன்னேற்றமும் வளர்ச்சியுமே வலிமை மிக்க இந்தியாவை உலகுக்கு உரு வாக்கிக் காட்டும்.**

**—சர்தார் படேல்**

**☆ எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல அத்தகைய எதிர்ப்பின் நடு விலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.**

**—டாக்டர் எம்.ஜி.ஆர்.**

ஆராய்ச்சிகள் செய்வார். தமிழ் எழுத்துகள் பற்றி ஆராய்வதிலும் கவனம் செலுத்தினார்.

தமிழ்நாட்டின் மிகப் பழைய சமயங்களில் மிக முக்கியமானது ஜைனமும், பௌத்தமும் ஆகும். இவை புறக்கணிக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இவற்றுக்குப் புத்துயிர் ஊட்ட முனைந்தார். இம்மதங்கள் ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் சிறப்புற்று விளங்கி வந்ததையும், அது தமிழிலக்கியத் திற்குச் செய்துள்ள தொண்டுகள் குறித்தும் சீனி. வேங்கடசாமி அவர்கள் அடிக்கடி கூறுவார். எனவே, இம் மதங்களைச் சேர்ந்தவர்களை அணுகினார். அவர்களோடு பழகினார். அம் மதங்கள் குறித்த உண்மைகளை அறிய இந்தத் தொடர்பு அவருக்கு உதவியாக இருந்தது.

இந்தச் சமயத்தில், உயிர்ப்பலி எதிர்த்துப் போராடி வந்த ஜீவபந்து டி.எஸ். ஸ்ரீபால் அவர்களின் நட்பு இவருக்குக் கிடைத்தது. இருவரும் இணை பிரியா நண்பர்களாயினர். இருவரும் பல இடங்களுக்குச் சென்று ஜைன மதத் தொடர்பான செய்திகளைத் திரட்டி வந்தனர்.

சீனி. வேங்கடசாமி அவர்களின் ஆராய்ச்சித் திறனை, பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார், வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன், மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை, டாக்டர் மு.வ., டாக்டர் அ. சிதம்பரநாதனார், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் பாராட்டியுள்ளனர். மகாகவி பாரதியாரும் சீனி. வேங்கடசாமி அவர்களின் சீரிய தமிழ்ப் பணிகளை வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

ஜைன, பௌத்த மதங்களின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துக் காட்டியவர் சீனி. வேங்கடசாமி அவர்கள். எந்தக் கட்டுரையாக இருந்தாலும், நூலாக இருந்தாலும் பல முறை ஆய்ந்தபிறகே எழுதுவார். எளிமை, இனிமை அவரது எழுத்துக்களில் இருப்பது போலவே, அவரது தோற்றத்திலும் இருந்தது.

"அடக்கம் அமரருள் உய்க்கும் என்னும் குறளமுத நெறி நின்று செயற்கரிய செயல்களைச் செவ்விதின் ஆற்றிவரும் அன்பர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த கலைக் களஞ்சியம்" என்று புகழ்மாலை சூட்டுகிறார் தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து அவர்கள்.

அல்லும் பகலும் அயராது உழைத்து, அன்னைத் தமிழுக்குப் பல அணிகலன்களைத் சூட்டி மகிழ்ந்தார் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள். அவை:

1. கிறிஸ்தவமும் தமிழும், 2. பௌத்தமும் தமிழும், 3. சமணமும் தமிழும், 4. மகாபலிபுரத்துச் சைன சிற்பம், 5. இறையனார் களவியல் ஆராய்ச்சி, 6. பௌத்தக் கதைகள், 7. இறைவன் ஆடிய எழுவகைத் தாண்டவங்கள், 8. மகேந்திர வர்மன் சரித்திரம், 9. நரசிம்மன் சரித்திரம், 10. மூன்றாம் நந்திவர்மன், சரித்திரம் 11. புத்த ஜாதகக் கதைகள் (மொழி பெயர்ப்பு), 12. அஞ்சிறைத் தும்பி, 13. கௌதம புத்தர், 14. மறைந்து போன தமிழ் நூல்கள், 15. சாசனச் செய்யுள் மஞ்சரி, 16. மனோன்மணீய உரை தொகுப்பு

காலமெல்லாம் கன்னித் தமிழுக்காகவே தம் கவனத்தை யெல்லாம் செலுத்திய மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், திருமணமே செய்து கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றாசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், 8.5. 1980-இல் மறைந்தார். என்றாலும் அவரது புகழ் மறையவில்லை. அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டு அகல் விளக்காய் இன்றும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது.

—பி.வி. கிரி

**ஒன்றே குலம்**

நமது சமூகத்தில் நிலவி வரும் குறைபாடுகள் நீங்க வேண்டுமெனில் நாம் எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

# பெண் கல்வியின் பெருமை



## முனைவர் சிவகாம சுந்தரி

கடல் சூழ்ந்த இத்தமிழ் நாட்டின் அச்சாணியாக இருக்கக்கூடிய தாய்க்குலம், இன்றுவரை ஆடம்பரமான வார்த்தைகளாலும், அலங்காரமான சொல் அடுக்குகளாலும், அபிஷேகிக்கப்பட்டு வருகின்றதேயல்லாமல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய, சரியான இடத்தைக் கொடுப்பதற்கு நம்மில் பலரும் சிறிது தயங்கிக் கொண்டிருக்கிறோம். அக்காரணத்தால், இந்த எட்டாவது உலகத் தமிழ் நாட்டில் பெண்ணின் பெருமையைச் சிறிது அளவாவது நாம் புரட்டுவோமேயானால், 21-வது நூற்றாண்டை நோக்கி நாம் செல்ல வேண்டிய கட்டத்தில், என்னையல்ல, எனக்குப் பிறந்திருக்கக்கூடிய என்னுடைய மக்களை, என்னுடைய மக்களைக் கூட அல்ல; அந்த மக்களுக்குப் பிறக்கக்கூடிய பேரக் குழந்தைகளை மிகச் சிறப்பாக வளர்க்க வேண்டுமென்று சொல்கின்ற நோக்கத்தை மனதிலே தாங்கித்தான் பெண்ணின் பெருமையை இந்த மாநாட்டிலே ஒரு சிறப்பான இடமாகக் கொடுத்திருக்கிறார்கள்.


கல்வியைப் பற்றி வளமாக நம்முடைய புழங்காலத்திலேயிருந்து இக்காலம் வரை அதாவது கல்வி என்று பொதுவாகச் சொன்னாலும், பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லி வந்திருக்கிறார்கள்.

**கல்வியின் அடித்தளம்**

அது முறையான கல்வியாக இருந்தாலும் சரி, அது முறை சாராக் கல்வியாக இருந்தாலும் சரி, தொடர்க் கல்வியாக இருந்தாலும் சரி, அனுபவக் கல்வியாக இருந்தாலும் சரி, ஆரம்பக் கல்வியாக இருந்தாலும் சரி, பல்கலைக் கழக ஆராய்ச்சிக் கல்வியாக இருந்தாலும் சரி அந்தக் கல்வியிலே என்ன அடித்தளமாக இருக்க வேண்டும் என்று சொன்னால், **Man making educaiton** அதாவது மனிதனை மனிதனாக்கக்கூடிய கல்வியை, இந்த நாட்டிலே 2000 ஆண்டு காலம் தொடங்கி, இந்தக் காலத்திலே பாவேந்தர் பாரதி தாசன் அவரைத் தொடர்ந்து வருகின்ற பரம்பரை வரைக்கும், தமிழால் இந்தப் பெண் கல்வியை வற்புறுத்திக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

**"ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே"** என்று திட்டமிட்டக் கல்வியைக் கற்றிருந்தாள் சங்க காலத்துப் பெண். **"செருமுகம் நோக்கிச் செல்க"** என்கிற வீரக் கல்வியைக் கற்றிருந்தாள். "உங்கள் தலை நரைத்துவிட்டதா? நீங்கள் இதை உபயோகப்படுத்தினால் கறுப்பாக மாற்றலாம்!" என்றில்லை. என்றும் இளமைக்குரிய ஒரு கல்வியை ஒரு தாய் சொல்வதாகப் பிசிறாந்தையார் அங்கே சுட்டிக்காட்டிச் சொல்வார். என் தலை நரைக்கவில்லை. அதற்கு என்ன காரணம் தெரியுமா? **"மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்."**

மாட்சிமை பொருந்தியவள் என் மனைவி. அந்த மாட்சிமை என்று சொல்கின்ற சொல்லிலே



அவள் கற்று இருக்கக்கூடிய அனைத்துக் கல்வியையும் காலத்திலே எடுத்துக்காட்டிய தன்மையை நம்முடைய சங்க இலக்கியங்கள் எடுத்துச் சொல் கின்றன.

**'புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'**

—என்று புரட்சிக் கவிஞர் பாடினார். பண்டைத் தமிழகத்தில் அந்த வயது முதிர்ந்த மூதாட்டி தலை நடுங்க, கோலைக் காலாகக் கொண்டு, மூன்று கால்களை வைத்துக்கொண்டு, அதியமானுக் கும், தொண்டமானுக்குமிடையே நடந்து, அவள் செய்த ஒரு பெரிய புரட்சி, அமைதி புரட்சி என்று சொல்கின்ற அந்த அமைதிக் கல்வியை அந்த சங்க காலத்துத் தாய் ஔவையார் கற்றிருந்தாள்.

**மனித நேயக் கல்வி**

கொடை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் "அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் அப்பாவோடு நாங்கள் இருந்தோம், இன்றில்லை தாயே நீங்கள் வந்துவிட்டீர்கள் என்நீலச் சிறறாடையை உங்களுக்கு நான் கொடுக்கின்றேன் ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று சொல் கின்ற அந்த மனித நேயக் கல்வியைப் பாரி மகளிர் கற்றிருந்தார்கள். இந்தத் தன்மை யைச் சங்ககால கல்வி முறை எடுத்துக் காட்டுகிறது.

விரலியர் ஆடினார்கள். தமிழ் ஆடியது. தமிழ்க் கல்வி ஆடியது. பாடினிகள் பாடினார்கள், அங்கே பண்ணோடு தமிழ் பாடியது என்று சொல்கின்ற தன்மையைக் காண்கிறோம். அதனால்தான் வள்ளுவப் பேராசான், ஆண் கல்வி பெண் கல்வி என்று சொல்லாமல் என்ன சொன்னார் என்றால்,

**'கண்ணுடையர் என்பவர் கற்றோர்'** - என்றார்

'கற்றோர் என்றால் அது ஆண்கள், இது பெண்கள் அப்படியெல்லாம் சொல்லாமல்

**'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்'**

—என்று கூறினார்.

**மனித நேயம்**

கல்வி என்பது பொது அது நாட்டினுடைய பொது உடைமைச் சொத்து என்பதை அழுத்தமாக வள்ளுவப்பேராசான் எடுத்துச் சொன்னார். அதனால்தான்

**'ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்'**

—என்று சொன்னார்.

சான்றாமைக்கு அடிப்படை எது என்று சொன்னால், எம்.ஏ., பட்டம் அல்ல எம்.பில். பட்டம் அல்ல. பி.எச்டி. பட்டம் அல்ல. பல்கலைக்கழகத்திலே இருக்கக் கூடிய பேராசிரியர் பட்டம் அல்ல. மனித நேயம் என்று சொல்கின்ற அந்தப் பக்குவமான பண்பு, என்னுடைய பிள்ளைகளுக்கு வந்துவிட்டால் இந்தச் சமுதாயம் முன்னேறும் என்று சொல்கின்ற கல்வியைத்தான் வள்ளுவப் பேராசான் எடுத்துச் சொன்னார்.

அதனால்தான்,

**"தம்மின்தம் மக்கள் அறிவுடைமை**
**மாநிலத்து**
**மன்னுயிர் கெல்லாம் இனிது.**

—என்று சொன்னார்.

அறிவு என்றால் நான் இந்த அ, ஆ, படிப்பில் ஏ,பி., சி.டி., படிப்பில் வந்துவிடும் என்று சொல்லவில்லை. ஆனாலும், சரியான அடித்தளம், அரங்கு இல்லாமல் வட்டாட முடியாது அல்லவா? எனவே, அந்த அரங்கை வைத்துக்கொண்டு கல்வியை முறையாகப் படித்து விட்டால், அறிவறிந்த மக்கட் பேற்றை அந்தப் பிள்ளை அங்கே கொடுப்பான் என்று வள்ளுவ பேராசான் எடுத்துச் சொன்னார்.



## நாலடியாரில் கல்வி நலம்

நாலடியார் செய்யுள்கூட இவ்வாறு சொன்னது—

**'குஞ்சி அழகும், கொடுந்தானைக்**
**கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல,**
**நெஞ்சத்து**
**நல்லம் யாம்என்னும் நடுவு**
**நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.**

—என்பதை ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவாக வைத்துச் சொன்னார்கள். அடுத்து வந்த காப்பியம்கூட இதை அழகாகச் சொன்னது. அன்று மதுரை நகர் வீதியிலே கண்ணகி நடந்து போகும்போது மன்னன் அவைக்குச் செல்லும் முன்னதாக ஒன்று கேட்டாள்.

**'சான்றோரும் உண்டுகொல்,**
**சான்றோரும் உண்டுகொல்,**
**ஈன்ற குழவி எடுத்து வளர்த்த**
**சான்றோரும் உண்டுகொல்'**

ஆக, தெரியாமல் அந்தக் குழந்தைகளை வீதியில் போட்டு விட்டுப் போகிற காலம், அந்தக் காலத்திலேயே இருந் திருக்கிறது. அந்தக் குழந்தைகளை எடுத்து வளர்ப்பதற்கான குழந்தைகள் காப்பகங்கள் அந்தக் காலத் திலேயே இருந்திருக்கின்றன.

அதிலே ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று திட்டவட்டமாகச் சிலப்பதிகாரமே சொல்லவில்லை. இந்தக் காலத்திலே பெண் குழந்தைகள் அப்படிப் போடப்படுகிறார்கள். அந்தக் காலத்திலேயே அந்தக் குழந்தைகளை எடுத்து வளர்த்து அவர்களுக்கு நல்ல கல்வி புகட்ட வேண்டும் என்பதை சிலப்பதி காரக் கல்வி முறை எடுத்துச் சொல்கிறது.

## ஆட்சி மொழி

மன்னன் முன்னால் சென்று ஒரு பெண் தமிழிலேயே வழக்காட முடியும். ஆட்சி மொழி தமிழாக வர வேண்டும் என்பது பற்றி அறிஞர் பெருமக்கள் அழகாகச் சொன்னார்கள்.

அதுபோல, வழக்குமன்ற மொழி தமிழிலேயே வர முடியும் என்பதை

**"தேரா மன்னா செப்புவ துடையேன்"** என்று தொடங்கி...
**"பட்டாங்கில் யானும் ஓர் பத்தினியேயாமாகில்**
**ஒட்டேன் அரசனோடு**
**ஒழிப்பேன் மதுரையையும்**

—என்று சொல்கின்ற அடிப் படையிலே அங்கே அழகாக, அந்தச் சிலப்பதிகாரத்திலே அரசியல் கல்வியை அந்தப் பெண்மணி கற்றிருந்தாள் என்பதை எடுத்துச் சொல்கிறது.

"அறிவின்மிக்கார்" என்று சொல்கிறது பெண்களைப் பற்றிப் பெரியபுராணம். அதுமட்டுமல்ல, ஆதிசிவனே சொல்கிறான் காரைக்கால் அம்மையார் நடந்து வருவதைப் பார்த்து, நம்மைப் பேணும் அன்னை காண், **கற்றவள் காண் முத்தமிழ் காண்"**

என்று சொல்லி, அவளுடைய கற்ற திறமையைப் பற்றிப் பெரிய புராணம் அழகாக எடுத்துச் சொல்கிறது.

இதை 19-வது நூற்றாண்டிலே வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளல் பெருமான் சொன்னார். "பால் நினைந்து ஊட்டும் அந்தத் தாய் சாகாக் கல்வியின் தரம் எல்லாம் உணர்ந்தவள் என்று. பெண்ணுக்குக் கல்வி கொடுக்க வேண்டும் என்பதை எடுத்துச் சொன்னார்.

**வித்தையைப் படிப்பியுங்கள்**

இடைக்காலத்தில் சாதியாலோ, சமயத்தாலோ பல்வேறு வகை யான சங்கடங்களாலோ, அரசியல் சூழ்நிலைகளாலோ, மாதரை நம்பக் கூடாது என்று சொல்லக் கூடிய ஒரு கருத்து வந்தபோது இந்தத் தஞ்சைப் பகுதியிலே வாழ்ந்த மாயுரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை அவர்கள் பாடினார்கள்:

**"வித்தையைப் படிப்பியுங்கள்**
**அய்யா,**
**புத்தியுள்ள கனவான்களே,**
**உங்கள் கண்களாம் எங்களுக்கு**
**வித்தையைப் படிப்பியுங்கள்**
**ஐயா!**

நான் உங்களுக்கு வண்ணாண் கணக்கு எழுதுவேன்.

புளி, மிளகு, சீரகம் அந்தக் கணக்குகளைப் பற்றியெல்லாம் நான் அழகாக எழுதுவேன்.

புண்ணிய பொக்கிஷம், பொறுமையின் இருப்பிடம்,

ஞானக் களஞ்சியம், நற்குணப் பாத்திரம்,

அவள் அழகான சுந்தரி, அறிவிலே மந்திரி,

மங்காத தீபம், ஆடாத மாமயில், அணையாத விளக்கு

—என்று எல்லாம் சொல்லி எங்களுக்கு நீங்கள் கல்வியைக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள்.

**கல்வி கற்றவள்**

இதைத் தொடர்ந்துதான் பாரதிக் கவிஞன்

**"பெண்ணுக்கு ஞானத்தை**
**வைத்தான் - புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**
**மண்ணுக்குள்ளே சில மூடர்**
**நல்ல**
**மாத ரறிவைக் கெடுத்தார்!"**

—என்று பாடினான். எங்களால் வேதம் படைக்கவும், முடியும், தெய்வ சாதி படைக்கவும் முடியும், நன்கு பல் வேதங்கள் வரைந்த கை, இந்தப் பாரத நாயகியினு டைய திருக்கை, உலக வாழ்க்கையி னுடைய நுட்பங்கள் தேரவும், ஒது பற்பல நூல்வகை கற்கவும், எம்மால் முடியும் எனப்பேசினார்.

எனவே, தமிழா பயப்படாதே, ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்களைக் கட்டு. அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே என்னு டைய தமிழச்சியை நீ படிக்க வை, ஏனென்றால், காலம் காலமாக அவளை நாம் ஏமாற்றிக் கொண்டே வந்திருக்கிறோம்.

**உழைப்பே உயர்வு**

**உழைத்து வாழ்பவனே வணங்கத்தக்கவன், வாழ்த்துக் குரியவன்! அந்த உழைப்பாளிக்கு ஊறு ஏற்படுவது சமுதாயத்தின் நல்வாழ்வையே புரையோடச் செய்வதாகும்.**

**—பேரறிஞர் அண்ணா**

**பெண் தெய்வங்கள்**

தெய்வமாகவே ஆக்கி அவளை உட்கார வைத்துவிட்டோம். செல்வத்தைத் திருமகள் என்றும், கல்வியைக் கலைமகள் என்றும், வீரத்தைக் கொற்றவை என்றும், பாடுகின்ற பாடல்களுக்கெல்லாம் அமைக்கும் இசைக்கு வசந்தா என்றும், கல்யாணி என்றும், சண்முகப் பிரியா என்றும் இப்படிப் பெண்களுடைய பெயரையே சொல்லி அவளை நன்றாக மிளகாய் அரைத்துக் கொண்டே இருக்கிறோம்!

ஆகையினால் அதிலிருந்து மாறி அவளுக்கு நல்ல கல்வியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிற அந்தத் தன்மையைத் தொடர்ந்துதான் பாவேந்தர் பாரதிதாசன் உங்களுக்கும் எனக்கும் புரிகின்ற தமிழிலேயே பாடிய அந்தப் பாட்டுப் பாட்டனுடைய, பாரதியினுடைய வாரிசு பாரதிதாசன் பேசினார்.

**"கல்வி இல்லாத பெண்கள்**
**களர்நிலம் அந்நிலத்திலே**
**புல் விளைந்திடலாம் நல்ல**
**புதல்வர்கள் விளைவ தில்லை!"**

கல்வி இல்லாத பெண் மின்னாள், எதிலும் மின்னாள், வாழ்க்கையில் மின்னாள், என்றார். இன்னொன்றும் சொல் லுவர் மகளிரெல்லாம் கல்வி அறிவு பெற்றவராயின் மருத் துவமே வேண்டாமாம்! அந்த மைசின், இந்த மைசின் இந்த சின். எல்லாம் ஓடிப்போகும். அந்தப் பெண்ணுக்குக் கல்வி கொடுத்து விட்டோம் என்று சொன்னால், கல்வி அறிவுடையவராயின் மருத்துவமே வேண்டாம் என்று

பாரதிதாசன் பாடினார்.

ஆக இந்தக் கல்வி ஆண்களுக்கு, பெண்களுக்கு என்று பேதம் பார்க்காமல் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டால்தான் இந்த நாடு எதை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறதோ, அந்த வழியிலே செல்ல முடியும்.

**தனிச் சட்டம்**

தொல்காப்பியர் காலத்திலே "முன்னீர் வழக்கம் மகவோடு இல்லை"யென்று சொல்கின்ற நிலையிலிருந்தது. அவர்கள் போகக்கூடாது. கடல் தாண்டி எக்காரணம் கொண்டும் போகக் கூடாது என்று சொல்கின்ற நிலை மாறி, நம்முடைய பிள்ளைகள் இன்று அயல்நாடுகளிலே, பொறியியல் படிப்பதற்கு, மருத்துவம் படிப்பதற்கு, சட்டங்களைப் படிப்பதற்கு, இலக்கியங்களைப் படிப்பதற்கு, துறைதோறும், நுறைதோறும் வளர்ந்து வருகின்ற கல்வியைப் படிப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றாலும், இன்றும் பெண் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டிய உயரிய மதிப்பு, அந்த 40 சதவிகிதத்தைத் தாண்டாத நிலையில் இருக்கின்ற இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே நம்முடைய தமிழ் நாட்டிலே வருகின்ற 21-ஆம் நூற்றாண்டு காலத்தில் எல்லாத் துறையும் முதல் துறையாக, சிறப்பாக வர வேண்டுமென்று சொன்னால், இந்தப் பெண்கள் கல்விக்கு 100 சதவிகித முக்கியத்துவம் கொடுத்து அவர்களைக் கல்வி அறிவு உடையவர்களாக வருங்காலச் சந்ததியைச் செய்ய வேண்டும். அதற்கான ஒரு தனிச் சட்டத்தை இயற்ற வேண்டும்.

பெண் குழந்தைகள் படித்து விடுவார்களேயானால், அவர்கள் பகுத்தறிவு பெற்றுவிடுவார்கள். அவர்கள் பகுத்தறிவு பெற்று விடுவார்களேயானால், இந்தச் சமுதாயம் எதை எதிர்பார்க்கிறதோ அந்தச் சமுதாயத்திற்கு வேண்டிய அனைத்தையும் செய்வார்கள்.


'அ' சொல்லிக் கொடுப்போம். 'அம்மா' என்று விரிவாக்கம் சொல்லித் தருவோம். அதன் வழியாக அன்பைச் சொல்வோம். 'அ' என்று சொல்லிக் கொடுப்போம். அதற்கு 'அகத்தியன்' என்று விரிவாக்கம் சொல்லிக் கொடுப்போம். தமிழன் பெருமையை எடுத்துக் காட்டுவோம்.

அறிவியல் தமிழ் 'அ' என்று சொல்வோம். அகத்திக்கீரை என்று சொல்லிக் கொடுப்போம். அந்த அகத்திக்கீரை நீங்கள் சாப்பிட்டால் உங்கள் அகம் நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு நனைந்து நனைந்து உனக்கு அன்புக் கல்வி கிடைக்கும் என்று சொல்கின்ற அந்தச் சத்துணவுக் கல்வியை, அந்த அறிவியலையும், அகத்தியனையும், அகத்திக்கீரையையும், என்னுடைய முத்தமிழோடு, நான்காவது கல்வியையும் சேர்த்துச் சொல்லித் தர வேண்டும். இந்தக் கல்வி, பாதுகாப்பாகத் தமிழகத்திலே பெண்கள் கையிலே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

> கடினமான உழைப்பே நம் வளர்ச்சிக்கு அடித்தளத்தை உருவாக்கிக் கொடுக்கும். உண்மை பொறுப்புணர்ந்து ஒற்றுமையுடனும் உறுதிப் பாட்டுடனும் நம் மன உறுதிப் உழைக்கும் நம் நாட்டில் பாட்டினால்தான் நம் நாட்டில் முன்னேற்றத்தைக் காண முடியும்.
>
> —அண்ணல் காந்தியடிகள்

> ஒரு நல்ல தொழிலும், போதுமான வருமானமும், எதிர்காலத்துக்கும் கொஞ்சம் மீத்துவைக்க வசதியும் தன் குழந்தைகளுக்குக் கல்வி புகட்ட அறிவும், பிறருக்கு உதவிடும் எண்ணமும் உடையவன் எவனோ அவன் உண்மையான உள்ளவ மகிழ்ச்சியானவான்.
>
> —இங்கர்சால்

# வியர்வையினால் ஒரு விதி எழுது



வியர்வை யினாலொரு விதியெழுது
விண்ணிலும் மண்ணிலும் அதையெழுது
உணவைத் தொடுகிற தனிஉரிமை
உழைக்கிற கைக்கே என எழுது

உலகம் உண்கிற உப்பெல்லாம்
உழைப்பவர் வியர்வை வழங்குவது
உலகப் புதுமையின் ஆதாரம்
ஒருதுளி வியர்வையில் அடங்குவது



பனிமலை வியர்க்கும் பொழுதினிலே
பாகீரதிகள் கருவாகும்
மனிதர்கள் வியர்க்கும் பொழுதினிலே
மாபெரும் உலகம் உருவாகும்

கல்லைப் படைத்தவன் கடவுளென்றால்
கலைகளைப் படைத்தவன் மனிதனடா
மண்ணைப் படைத்தவன் பிரம்மன் என்றால்
மாநகர் படைத்தவன் மனிதனடா



வேர்கள் நமக்குச் சொந்தமென்றால்
விழுதுகள் நமக்கென்ன உறவில்லையோ!
வேர்வை நமக்குச் சொந்தமென்றால்
விளைகிற பயனில் தொடர்பில்லையா!

வெற்றிக்கும் உழைப்புக்கும் திருமணமாம்
வியர்வைக் குழந்தைகள் பிரசவமாம்
நெற்றியின் வியர்வையை விரலில்வழி
நீள்புவி இவர்க்கென உயில்எழுது!

**கவியரசர் இளந்தேவன்**

# எங்கெங்கு காணினும் சக்தியடா!

—டாக்டர் புனிதா ஏகாம்பரம்

"செந்தமிழே உயிரே நறுந்தேனே, செயலினை மூச்சினை உனக்களித்தேனே...

நைந்தாய் எனில்நைத்து போகும் என் வாழ்வு. நந்நிலை உனக்கெனில் எனக்கும் தானே?"

—செழுந்தமிழ், மக்களின் செந்தமிழாக உணர்வோடு இருக்கக் கூடிய தமிழர்களின் உயிர்த் தேனாக விளங்கக் கூடியது என்பதை இவ்வாறு விளக்கிப் பாடினார், 'எங்கெங்கு காணினும் சக்தியடா ஏழு கடல் அவள் வண்ணமடா' என்று பாடின்ார் பாவேந்தர் பாரதி தாசனார்.

'பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா

பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா'

—என்று பாடினார் மகாகவி பாரதியார். அப்படியெல்லாம் கவிஞர் போற்றும் இலக்கிய வடிவமாக் விளங்குவதே மகளிர் சமூதாயம்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். இலக்கியத்திலே பெண்களை ஒரு காலத்தில் மட்டமாக-கேவலமாகப் பேசினார்கள். வள்ளுவரைக் கூட வம்புக்கு இழுத்துப் பார்த்தோம் நாங்களும். வாழ்க்கைத் துணை நலம் என்று பத்துக் குறளைப் பெண்களுக்குத்தானே சொல்லியிருக்கிறார்கள். ஏன் ஆண்களுக்குச் சொல்லவில்லை? நமக்குத்தான் சொல்லுவார்கள். சொன்னால் நாம் கேட்டுக் கொள்வோம். ஆண்கள் சொன்னால் கேட்கமாட்டார்கள் என வள்ளுவருக்கே தெரிந்திருக்கிறது. அதனாலேதான் ஏன் அதைச் சொல்லவேண்டும் என்று அவரே விட்டு விட்டார்.

ரொம்பப் பெருமையோடு இந்த வாழ்க்கைத் துணை நலத்தைச் சொல்லியுள்ளார். பெண்கள் அதைப்போன்று ஏற்றம் மிகுந்தவராக இருக்க வேண்டும்.

ஒரு காலத்திலே அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு நான்கு குணங்கள் பெண்களுக்கு வேண்டும் என்றனர். வந்தார் எங்கள் எட்டயபுரத்துச் சிங்கம், அவர் சொன்னார் "நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்று ஒரே போடாய்ப் போட்டார். குழந்தைகள் பிறக்கறதைப் பற்றிச் சொன்னார். "பெண் குழந்தை பிறக்கிறது மோசம். 'ஜாண் பிள்ளை ஆனாலும் ஆண் பிள்ளை' என்பார்கள் சிலர். ஆனால் அவர் சொன்னார் 'நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்' அப்படி ஒரு கம்பீரம் பெண்களுக்கு வேண்டும் என்றார். அப்படியிருந்தால்தான் நமக்குப் பெருமை, சிறப்பு.

'தனம்தரும் கல்விதரும்,
ஒரு நாளும் தளர்வறியா...
மனம்தரும் தெய்வ வடிவும்தரும்,
நெஞ்சில் வஞ்சமில்லா

இனம்தரும், நல்லன எல்லாம்தரும் எது? 'அபிராமி கடைக்கண்களே' என்று பாடினார்கள்.

பாரதி என்ன அழகாக இலக்கியத்திலே சொன்னார் தெரியுமா?

'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!'

எவ்வளவு அழகாகச் சொல்கிறார்!

'மெச்சி உன்னை ஊரார்
புகழ்ந்தால்
மேனி சிலிர்க்குதடி!'

எத்தனை அழகாகச் சொல்கிறார்!

'மெச்சி உன்னை ஊரார் புகழ்ந்தால் மேனி சிலிர்க்குதடி!

ஓடி வருகையிலே என் உள்ளம் குளிருதடி என்றார். பெண் பிள்ளை அவ்வளவு அழகாக ஓடிவரும். ஆண் பிள்ளை ஓடி வரமாட்டான். ஓடியே போயிடுவான்! அப்பா பேச்சைக் கேட்க மாட்டான். அம்மா பேச்சைக் கேட்க மாட்டான்

பெண்கள் என்றால் பேணு கின்ற தன்மை உடையவர்கள், சிறப்பு உடையவர்கள். ஆடவர் என்பதற்கு என்ன இலக்கணம்? ஆடிக்கொண்டே இருப்பதா?

'உண்டி சுருங்குதல் பெண் டிற்கு அழகு' என்கிறார்கள்; அப்படியானால் 'தொந்தி போடுதல் ஆணுக்கு அழகு' என்று கூறலாமா? ஆகவே இந்தப் பழமொழிகளை வைத்துக் கொண்டு நாம் பேசக்கூடாது.

பெண் என்பவள் அறிவோடு இருக்க வேண்டும் என்பதற்காக, திறமையோடு இருக்க வேண்டும் என்பதற்காக அருமையாக வீரத் தோடு பாடினார்கள். ஆணுக்கு வீரம் இயற்கையிலே இருக்கும் என்று சொல்லுவார்கள். ஆனால் அந்த வீரம் எப்படி வருமென்றால், ஒரு பெண்ணாலே தான்.

ஒரு பெரிய சபை, இதுபோல இருக்கக்கூடிய சபை; அந்தச் சபையிலே வில்லைக் கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இராமபிரான் அந்த வில்லை வளைக்கவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. எல்லோரும் வந்து முயன்று பார்த்துத் தோற்றுப் போனார்கள். அங்கேயிருந்த இராமபிரான் வந்தார். வளைக்க வேண்டும் என்பதுதான் போட்டியின் விதி. இராமபிரான் வந்தார். எடுத்தார். ஆனால் என்ன ஆயிற்று என்றால், 'எடுத்தது கண்டார் இற்றது கேட்டார்' என்கிறார் கம்பர்.

வில்லை அவர் எடுத்ததைத் தான் பார்த்தார்களாம் அடுத்து அது ஒடிந்த போன சத்தம்தான் கேட்டதாம். 'அடேயப்பா எவ்வளவு பெரிய பவர்! எவ்வளவு பெரிய சக்தி! அப்படின்னு எல்லோரும் வியந்து பார்த்திருக்கிறார்கள்.

இராமனுக்கு அந்த வீரம் வரக் காரணம், அவன் முன் சீதை வந்து நின்றதுதானாம்!

இதை இராமாயணத்திலே கம்பர் எழுதுகிறார். அந்தப் பெண் நடந்து வருகிறாள். ஒசிந்து, ஒல்கி, மென்மையாக அழகாக நடந்து வருகிறாள். அந்தப் பெண் சீதையைப் பார்க்கிறார் ஒரு பெரியவர். அந்த முனிவர் அவளைப் பார்த்துவிட்டுச் சொல்கிறார்.

"நச்சுடைக் கண்மலர் நங்கை இவள் நின்றால், இச்சிலை கிடைக்க மலை ஏழையும் தகர்ப்பேன்"! 'இந்த மாதிரி ஒரு பெண் எனக்குக் கிடைப் பாளானால், இந்த வில் என்ன- ஏழேழு மலையும் நான் நொறுக்கிவிடுவேன் என்று சொன்னாராம் அக்கிழவர்!

கண்ணின் கடைப் பார்வை காதலியர் காட்டி விட்டால்....

'குமரர்க்கு மாமலையும் மண்ணில் ஓர் கடுகாம்' —என்றும் 'காற்றில் ஏறி அவ் விண்ணையும் சாடுவோம் காதல் பெண்கள் கடைக்கண் பார்வையில்'

—என்று பாரதியும் பாரதி தாசனும் பாடினர். ஆக, பெண்கள் கடைக்கண் பார்வை பார்த்தால் போதும், பெண்ணு டைய வீரம் வெளிப்பட்டு, அது ஆணுக்குப் போய்ச் சேரும்.

பெண்ணின் பார்வை என்பது அருள் பார்வை. தன்னம்பிக்கை யோடு தலைவனுக்கு நிறைவு தரக்கூடிய பார்வை. அழகாக ருசித்துக் காட்டக்கூடிய இலக் கியத்தைப் படைத்து, பெண்மையை உயர்த்தின இந்த நாட்டின் இலக்கியங்கள். நாம் மறந்துவிடக் கூடாது. நினைத்துப் பார்ப்போம்.

இங்கே புனிதவதி அம்மையார் பற்றிப் பேசினார்கள், அன் றைக்கு இருந்த முதலமைச்சர் ஒருவர் அவருடைய பெயர் அருட்செல்வர். சேக்கிழார் பெருமானால் ரொம்ப அருமை யாகப் பாடப்பட்டவர். அம்மை யாருடைய பெயரை எழுதாமல் அவர் ஊர்ப் பெயரை எழுதி, அம்மையாருடைய பெயரிலே புராணத்தை எழுதாமல்

**வாழ்க்கையை வளமடையச் செய்வதே கல்வியின் நோக்கம்.**

**—டாக்டர் ராதாகிருஷ்ணன்**

‘புனிதவதியார் புராணம்’ என்று எழுதாமல் ‘காரைக்கால் அம்மையார் புராணம்’ என்று எழுதினார்கள். செய்யலாமா இப்படி?

அதனால்தான் இன்றைக்கு சிவன் கோவிலுக்குள்ளே போனால், பிரகாரத்தை வலம் வருகிறபொழுது, 63 நாயன்மார்களிலே 62 பேர் நின்று கொண்டு இருப்பார்கள். ஒரே ஒரு பெண்மணிக்குத்தான் உட்காரக் கூடிய பெருமை!

ஓர் ஆண் ரொம்பப் பிரியமாக இருந்தால்- பெண்ணைக் கனி என்பான், பிடிக்கவில்லையென்றால் சனி என்பான். பெண்ணைத் தெய்வமாக வைத்துப் போற்றிப் பாடியது இலக்கியம். நாம் அதை மறந்துவிடக் கூடாது.

ஒவ்வொரு படியாக வந்து கொண்டே இருக்கக் கூடிய காலகட்டத்திலே, சங்க இலக்கியம்...அதில் ஔவை மூதாட்டி என்கிற பெண்பாற் புலவர் அவர்கள் இந்த உலகத்திலே இருக்கக் கூடிய இடங்களுக்கு எல்லாம் சென்று தமிழகத்தினுடைய ஒவ்வொரு பகுதிக்கும் சென்று தன்னுடைய அருமையான தமிழை, செந்தமிழை ஒவ்வொருவருக்கும் சொல்லிக் கொண்டு வந்தார். அவருடைய பெருமையைப் பார்க்கிறான் அதியமான்.

தான் சென்ற இடத்திலே ஒரு அருமையான நெல்லிக் கனி அந்த நெல்லிக்கனியைச் சாப்பிட்டான் என்று சொன்னால், அவன் நீண்டகாலம் உயிர் வாழலாம்; ஆனால் அவன் என்ன நினைத்தான்? அதை அந்த ஔவைப்பிராட்டி கையில் கொடுக்க வேண்டும். இவர்கள் கையிலே கொடுத்தால்தான் இவர்கள் பல கோடி ஆண்டுகளுக்கு வரலாறு காணக் கூடிய அளவுக்கு மிகச் சிறப்பாக வாழ்வார்கள் என்று தனக்குக் கிடைத்த நெல்லிக் கனியை ஒரு தமிழ் மகளுக்குக் கொடுத்தான் என்றால், அதை விடப் பெண்ணின் பெருமையை வேறு எந்த இலக்கியம் சொல்ல முடியும்?

“இரண்டு பெண்கள் சேர்ந்தால் வேறு எதுவுமே வேண்டாம். இன்னொரு பெண்ணைப் பத்தி பேசுவாங்க. இல்லைன்னா கோள் மூட்டுவாங்க” என்பார்கள் சிலர். ஆமாம், இரண்டு பெண்கள் சேர்ந்து பேசினால் மூன்றாவதாகவும் ஒரு பெண்ணைப் பற்றித்தான் பேசுவோம். ஆனால், இரண்டு ஆண்கள் பேசினால்- மூன்றாவதாக- ஒரு பெண்ணைப்பற்றித்தான் பேசுவார்கள். நாங்கள் அப்படியில்லை, பேசினால் நாங்க





எங்களைப் பற்றித்தான் பேசுவோம்.

அது போலவே சிலர் பெண்கள் எப்போதுமே சண்டை போடுவார்கள் என்று வேடிக்கையாகச் சொல்லுவார்கள். எங்களை ஏளனப்படுத்துவார்கள். ஆனால் ஒரு பெண், அந்த ஔவை மூதாட்டி என்ன செய்தார்?

அதியமானுக்கும், தொண்டமான் இளந்திரையன் என்று சொல்லக் கூடிய அரசனுக்கும் இடையில் பெரிய போர் மூளக் கூடிய அபாயம் வந்த நேரத்திலே எல்லாரும் ஒதுங்கி விட்டார்கள். பெரியவர்கள் எல்லாம் அப்படி இப்படி மறைந்து ஒதுங்கிவிட்டார்கள். அந்தப் பெண், தமிழ் மூதாட்டி, ஔவை, நேராகப் போய், பெருமிதத்தோடு போய், போரைக் கைவிடும்படி தொண்டமானிடம் பேசினார்.

பெண்கள் எதையும் பெரும்பாலும் நேரடியாகச் சொல்ல மாட்டார்கள், கிண்டலாகவே சொல்லுவார்கள். பையனைப் பார்த்துத் திட்டுகிற மாதிரி, அப்பாவைத் திட்டுவார்கள். அதுதான் பெண்களுடைய இயல்பு. "ஏண்டா 'திரு திரு' ன்னு உங்க அப்பா மாதிரியே முழிக்கிறே?" என்பார்கள். அவன் புரிந்துகொள்ளுவான். 'அப்பா முழி திருட்டு முழி போல இருக்கு, அம்மா சரியா சொல்றா' அப்படின்னு புரிஞ்சுக்குவான்.

லேசா திட்டற மாதிரி, அதே மாதிரிதான் மாமியாரைத் திட்டணும்னா நேரிடையாகத் திட்டமாட்டாங்க. 'ஏங்க உங்களுக்கு ஏதாவது தெரியுதா, உங்களுக்கும் ஒண்ணும் தெரியாது, உங்கம்மாவுக்கும் ஒண்ணும் தெரியாது'ம்பாங்க. 'டூ இன் ஒன்' மாதிரி அப்பாவையும் சேர்த்து அடிச்சுடுவாங்க- அதாவது ஜாடையாகக் கிண்டல் பண்ணுவது.

அதுபோலவே, ஔவை மூதாட்டி வஞ்சப் புகழ்ச்சியாகப் பேசினார். தொண்டமானுடைய அவைக்குப் போனார். போனதும் அவரை அழைச்சுக்கிட்டு, நேரே 'மிலிட்டரி' அணி வகுப்பு மாதிரி ஒவ்வொரு இடமாகக்காட்டிக் கொண்டு வருகிறான் மன்னன். பெருமையோடு ஆயுதங்கள் எல்லாம் வீற்றிருக்கிறது. எல்லாம் பளபளன்னு இருக்கு. வேல் வில் எல்லாம் வரிசையாக அடுக்கி வைச்சிருக்கு. அந்த ஔவையைப் பார்த்து, 'பார்த்தியா? உன்னுடைய அதியமான் நெடுமாறன் எப்படி- நான் எப்படி பார்த்தாயா? என்னுடைய படைக்கலன்களைப் பார்த்தியா? எவ்வளவு அருமையா தயார் பண்ணி பளபளன்னு வெச்சிருக்கேன் பார்த்தியா?' என்று பெருமையோடு கேட்டான்.

அந்த அம்மையார் அவை எல்லாவற்றையும் பார்த்துவிட்டுச் சொன்னாங்க, 'உண்மைப்பா, எல்லாம் பளபளன்னு அப்படியே இருக்கே! நல்ல நறு நெய் பூசி பிரமாதமாக வெச்சிருக்கியே! பார்க்கிறதுக்கு பளபளன்னு சிறப்பாக இருக்கு. ஆனால் என்னுடைய அரசன் அதியமான் நெடுமான் அஞ்சியினுடைய ஆயுதங்கள் எல்லாம் முனை உடைந்து, வேலெல்லாம் பழுதாகி உடைஞ்சு கிடக்கும். வில் எல்லாம் அப்படியே வளைஞ்சு ஒடிஞ்சு கிடக்கும், எல்லாம் போய் எங்கே தெரியுமா கிடக்குது? செம்மை பண்ணக் கூடிய அந்தக் கொல்லன் உலை கடையிலே போய்க் கிடக்கிறது. ஏன் தெரியுமாப்பா? அவன் அடிக்கடி போர் செஞ்சிக்கிட்டே இருப்பான். அதனாலே எப்போதும் ஆயுதங்கள் பயன்படும். உன் ஆயுதங்களை எப்போதும் அழகு பார்த்துக்கிட்டிருக்கிற 'ஷோ கேஸ்'லே வைச்சுக் கிட்டிருக்கறே! அதனாலேதான் இப்படி பளீர்னு இருக்கிறது" என்று சொன்னாள்.

இப்படிச் சொன்ன உடனேயே 'இந்தக் கிழவியை நாம என்னமோ நினைச்சோமே, இந்த அம்மா தபால்னு இப்படி ஒரு குண்டைத் தூக்கி போட்டிருச்சேன்னு' வெட்கப்பட்டு, ஆகா எப்போதும் போர் புரியும் ஆற்றலுடைய மிகப் பெரிய வீரனா அதியமான் நெடுமான் அஞ்சி! என்று அச்சப்பட்டுக் கொண்டு போரையே அவன் நிறுத்திவிட்டான் என்றால், ஒரு போரை நிறுத்தக் கூடிய மிகப் பெரிய பெருமை யாருகிட்டே இருக்கு? அதைத்தான் சொன்னாங்க, 'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே' என்று!

ரொம்ப அருமையான சிறப்

> **பெண்களுக்கு அழகு என்பதை ஆடையிலும் ஆபரணங்களிலும் காண முடியாது. பணியாற்றுவதில் தான் உண்மையான அழகு பரிணமிக்கிறது.**
>
> **அண்ணல் காந்தியடிகள்**

பான செயல்களைச் செய்வது பெண்களின் உந்து சக்தி என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அந்தப் பெண் எவ்வளவு அழகாக இருக்கிறாள்? இருந் தாலும் வீட்டிலே குடும்பத் திலிருக்கும் போது, இல்லறத்தில் இருக்கும்போது குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருப்பாள்.

'வினையே ஆடவருக்கு உயிரே' என்பார்கள். வேலை விஷயமாகக் கணவன் வெளியே போய் விடுவார். ஆனால் மனைவியினுடைய மனதிற்கு ஆடவர் உயிர். வீட்டிலே இருக்கக் கூடிய பெண்ணுக்கு யார் உயிர்? ஆடவர் உயிர். அந்த உயிரை வாங்கிக்கொண்டு ரொம்ப அருமையாகக் கண்ணுக் குள்ளே கணவனை வைத்துக் காப்பாற்றிக் கொண்டு, 'தற் காத்துக் கொண்டார் பேணி, தகை சார்ந்த சொற்காத்து' இவ்வளவு வேலைகளைச் சோர்வின்றிச் செய்வார்கள்.

எவ்வளவோ எண்ணற்ற அரும்பணிகள், தன்னையும் காப்பாற்றிக்கணும்; கணவனை யும் காப்பாற்றிக்கணும் சமு தாயத்திலே நல்ல பெயரையும் வாங்கிக் கொண்டு, இவ்வளவும் செய்துகொண்டு ஒரு பெண் சோர்வில்லாமல் இருக்கிறாள் என்றால், அந்தப் பெண்ணைப் பார்த்து அழகாகச் சொன்னார். பாவேந்தர் பாரதிதாசன்; 'குடும்ப விளக்கு' என்று சொன்னார். குடும்ப விளக்குன்னா பெண் களுக்குத்தான் சிறப்பு. டியூப் லைட்டு மாதிரி மின்னிட்டுப் போறதில்லே.

அதற்குத்தான் அழகாகப் பெண்ணைச் சொல்கிறபோது 'வந்தாள் மகாலட்சுமி', என் பார்கள். 'வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பெண் வேணும்' என் பார்கள். 'அப்படியானால், அது



வரையில் வீடென்ன இருட்டாவா இருக்கு- போய் சுவிச் போடற துக்கு ஒரு பெண்ணா?' என்று சிலர் கேலி பேசுவர். இல்லை வீட்டுக்கு விளக்கேற்றுவதற்கு ஒரு பெண், என்பது ஒளியைத் தரக்கூடியவள் ஒரு பெண். அந்தப் பெண் வருகிறாள், மகாலட்சுமி போன்ற தோற்றத் தோடு வருகிறாள் என்று அழகாக அந்தப் பெண்ணுடைய பெருமையைச் சொல்லுவார்கள்.

அந்தப் பெண் எவ்வளவு அருமையாக, விடியும் முன் எழுந்து, வீணை போல் பாடி, மாடு கறந்து அண்டா குண்டான் அழகாக விளக்கி, வட்ட நிலவை வரவழைத்தது போல் இட்டிலி சுட்டு, தொட்டுக்கொள்ள துவையல் அரைத்து, சுவை நீர் வடித்து, பள்ளி செல்லும் பிள்ளைகளுக்குப் பாங்கோடு பரிமாறி, பள்ளிக்கனுப்பி, கடைக்குச் செல்லும் கணவனுக்குக் கனிவோடு பரிமாறி கடைக்கு அனுப்பிவிட்டு கொண்ட வனுக்கு எதை பிடிக்கும், குழந் தைகள் எது விரும்பும், கண் தூங்கும் மாமன் மாமிக்கு எது விருப்பம் என்றெல்லாம் மிக அருமையாக அந்த உணவை ஆக்கிப் படைத்து, களைப்போடு வரக்கூடிய கணவனுக்கு கனிவோடு பரிமாறி கடைக்கு அனுப்பிவிட்டு, பள்ளியிலிருந்து வரக்கூடிய பிள்ளைகளுக்குக் கனிவோடு கதைகள் சொல்லி, சத்தான உணவுகளை ஊட்டி, நள்ளிரவு பன்னிரண்டு மணி வரை ஓயாத தீபமாக அந்த வீட்டிலே சென்று ஆடக் கூடிய பெண்தான், அவள்தான் குடும்ப விளக்கு என்ற அழகாகச் சொல்லிவைத்தார் புரட்சிக் கவிஞர்.

மேலும் சொல்வார் வாழ்க் கையைச் சரியாக நடத்த உதவுவது பெரும்பாலும் மனைவியாவாள். அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான், அவளாலே மணவாளன் சித்தி பெற்றான். 'குவியும் எழில் பெண்ணுக்கு ஊறு செயின் குள்ளர்களே, கேட்டீரோ சாவின் கேட்டை, கவலையுறும் ஆடவர்கள் நாளும் செய்யும் கணக்கற்ற ஊழல் களையெல்லாம் அந்த நகையற்ற பெண்கள் அன்றோ விளக்கு கின்றார் என்று அருமையாகப் பெண்களைப் பற்றி ஒரு இலக் கியம் படைக்கிறார்கள் என்றால் அந்தப் பெருமை இந்தப் பெண்ணுக்குத்தானே இருக் கிறது?

அதனால்தான் இவள் தனக் குள்ளே எல்லாவிதச் சிறப்பு களையும் அடக்கிக் கொண்டு, எல்லாவிதப் பெருமைகளையும் அடக்கிக் கொண்டு, அகழ் வாரைத் தாங்கும் பூமிபோலப் பொறுமையோடு இருக்கிறாள். யாராவது தீயது செய்ய வரு கிறார்களா, அவர்களை எதிர்த்து நிற்கக் கூடிய, மிகப் பெரிய பூபாளம் பாடக் கூடியவளாக இருப்பவள், பூ ஒன்று புயலானது போல, இருபதாம் நூற்றாண் டிலே புறப்பட்டு வரக்கூடிய பெண் பொற்கொடியாக மாறி அவள் அந்தத் தீயதை அழிக் கிறாள்.

கண்ணகியைப் பார்க் கிறோம். மணிமேகலையைப் பார்க்கிறோம். ஒரு சாதாரண பெண், அவள் காலிலே கிடந்த

> **அமைதிக்கு உழைப்பதே உலகிற்கு நாம் செய்யும் கடமை ஆகும்.**
> **—டாக்டர் ராதாகிருஷ்னன்**

சிலம்பு, அது அதிகாரம் செய்த காப்பியம்தான் சிலப்பதிகாரம் என்று சொல்லி, இளங் கோவடிகள், பற்றற்ற துறவி, எல்லாவற்றையும் துறந்த முனிவர், யாரையும் வணங்காதவர், அவர் எவ்வளவு பெருமையாகக் கண்ணகியினுடைய காப்பியத் தையே எழுதி—

'இவளோ கொங்கச் செல்வி
குடமனையாட்டி,
செந்தமிழ் பாவை, செய்தவக்
கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்
தோன்றிய
திருமாமணி'- என்றெல்லாம்

சொல்லி, அந்தப் பெண்ணைச் சொல்கிறார் என்றால் எல் லோரும், கண்தோறும் கூப்பி, கை கூப்பித் தொழக்கூடிய பெருமை, பக்குவம் யாருக்கு வந்திருக்கிறது என்றால் இந்தப் பெண்ணுக்குத்தான்.

சேக்கிழார் தன்னுடைய காப்பியமாம் பெரிய புராணத் திலே பெண் என்பவள் மனையறத்தின் வேர், மனைக் குள்ளே இருக்கக் கூடிய வேரைப் போன்றவள், பூமிக்குள்ளே இருக்கக் கூடிய வேரைப் போன்றவள் என்றார்.

அதை அழகாகக் கவியரசு கண்ணதாசன் சொன்னார்,




"ஆலம் விழுதுகள் போல் உறவு ஆயிரம் வந்தும் என்ன! வேர்என நீயிருந்தாய் நான் வீழ்ந்து விடா திருந்தேன்" என்றார்.

ஆகவே, கணவன் ஒருவன்- ஆடவன் ஒருவன், செம்மாப் போடு தோளிலே துண்டைப் போட்டுக் கொண்டு பெருமை யோடு நடுவீதியிலே நடக்க வேண்டும் என்றால், வீட்டுக் குள்ளே இருக்கக்கூடிய ஒரு பெண் நல்லவளாக, சிறந்த வளாக, கற்புடையவளாக, பெருமை உடையவளாக இருந் தால் தான் அவன் இலக்கியம் படைத்து சமுதாயத்திலே மிகப் பெரிய புரட்சிகளைத் தர முடியும் என்று அழகாக நம் முடைய இலக்கியம் சொல்வதை நாம் மறந்துவிடக் கூடாது.

குறுந்தொகை இலக்கியமாக இருக்கட்டும், சங்க இலக்கியமாக, எந்த இலக்கியத்தை எடுத்துக் கொண்டாலும், பெண்ணைச் சொல்லுகிறபோது, மென்மையும் வரும், வீரமும் வரும்.

ஒரு பெண் அழகான பார் வையை உடையவள். அந்தப் பார்வை ஒன்றே போதும் அவளுக்கு. ஆனால் அந்தப் பார்வை என்ன செய்கிறது? நல்லதைச் சாதிக்கப் புறப் படுகிறது. அந்தப் பெண்ணின் கணவன் இவளுடைய வாழ்க் கையில் ஒளி சேர்க்கவேண்டும் என்பதற்காக, பொருள் சேர்க்க வேண்டும் என்பதற்காக வெளியூருக்கப் போய்விட்டான் புறப்பட்டுப்போன பிறகு இந்தப் பெண் அவனுக்காகக் காத்துக் கொண்டே நிற்கிறாள். விரைவில் கணவன் வருவான் என்று எதிர்பார்த்திருக்கிறாள், வரு கிறான். வந்தபிறகு, பொருளைக் குவிக்கிறான். குவிந்த பிறகு அதைப் பார்த்துவிட்டுச் சொல் கிறான்- "எல்லோருக்கும் அள்ளிக் கொடு; நாம் மட்டும் வாழவேண்டுமென நினைக்காதே; எல்லோர்க்கும் கொடு" என்று அந்தப் பெண்ணைப் பார்த்துச் சொல்கிறான். அந்தப் பெண்ணும் வாரி வாரி எல்லோருக்கும் கொடுக்கக் கூடிய பொதுநலம் படைத்தவளாக இருந்தாள் என்பதை அழகாக சங்க இலக் கியம் உணர்த்துகின்றது. நாம் அதை மறந்துவிடக் கூடாது.




ஆக- 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற சொல்லில் உள்ள உண்மையை உலகம் உணரவேண்டும்.

☆



வெல்டிங் தொழிலில் ஒரு தமிழ்ப் பெண்மணி

# இவர் ஆசியாவிலேயே முதல் பெண்மணி

இந்திய வங்கியின் நாட்காட்டி இந்தப் பெண்மணியின் புகைப்படத்தை வண்ணத்தில் வெளியிட்டு மக்களின் எண்ணங்களைக் கவர்ந்திருக்கிறது. ஸ்வீடன் நாட்டிலிருந்து சில பெண்கள் சென்னைக்கு வந்து இவரை நேரில் சந்தித்துப் பேட்டிக் கண்டு இவரது புகைப்படத்தைப் பல நூறு தபால் அட்டைகளுக்கு மேல் வெளியிட்டு பெருமைப் படுத்தியிருக்கிறார்கள். ரஷ்ய நாடு இவரைப் பற்றி ஒரு வீடியோ படமே எடுத்து வெளியிட்டு இவரது பெருமையை இந்திய எல்லைக்கு அப்பாலும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

ஆண்கள் மட்டுமே செய்கின்ற தொழிலை ஒரு பெண்மணி அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த, சென்னையைச் சேர்ந்த ஒரு தமிழ்ப் பெண்மணி செய்து வருகிறார்.

அது என்ன தெரியுமா? கண்களைப் பறிக்கும்



ஒளியைச் சிந்தும் இரும்புகளை இணைக்கும் கடுமையான பணியாகிய வெல்டிங் தொழில். ஒரு காலத்தில் ஆண்களே அந்தப் பணியைக் கண்டு அஞ்சிய நேரத்தில் ஒரு பெண்மணி இந்த வெல்டிங் தொழிலில் இறங்கி கிட்டத்தட்ட தற்போது 60 வயதை எட்டியிருக்கிறார். இவர் தான் சென்னை பெரம்பூரைச் சேர்ந்த திருமதி கே. சுந்தராம்பாள்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்று பேசி, அடுத்த வீட்டுப் பெண்களையும் வம்புக்கு இழுத்துக் கொண்டு வெட்டிப் பொழுது போக்காமல், சுந்தராம்பாள் தன்னுடைய சொந்தக் காலிலேயே நின்று தன்க்கென ஒரு தொழிலை உருவாக்கிக் கொண்டு தனது கணவனுக்கு பெரிதும் உதவியாக இருந்து வருகிறார். அவர், இன்று சராசரியாக மாதத்திற்கு 50,000 ஆயிரம் ரூபாய் அளவிற்குச் சம்பாதிக்கின்ற திறமை பெற்றிருக்கின்றார். இவரைப் பற்றித் தெரிந்து கொள்வோமே!

சுந்தராம்பாள் வேலூரைச் சேர்ந்த கணபதி என்பாரின் மகளாவார். இவருடைய குடும்பமே வெல்டிங் தொழிலைச் செய்து வந்தது. தன் தந்தை யாருக்கு,சிறு வயதிலேயே உதவியாக இருந்து அந்தத் தொழிலை படிப்படியாகத் தன்னுடைய சகோதரருடன் கற்று வந்தார். தந்தையின் விருப்பத்திற்கிணங்க வெல்டிங் தொழிலின் நுணுக்கத்தைக் கற்றுக் கொண்டார்.

பின்னர், திருமணமாகி தன் கணவருடன் சென்னையில் தங்கிவிடவே, வெல்டிங் தொழிலை விட்டுவிட்டார். சில காலம் பொறுத்துத் தன் கணவரின் வருமானம் குடும்பத்திற்குப் போதாமையால், தான் கைவிட்ட வெல்டிங் தொழிலைச் செய்ய ஆர்வம் கொண்டு தன் கணவரின் உதவியோடு 1976-ஆம் ஆண்டு பெரம்பூரில் ரூ.5,000 முதலீட்டில் சொந்தமாக ஒரு வெல்டிங் தொழிலகத்தைத் தொடங்கினார். அதில் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு இன்றைய நிலையில் ரூ.4 இலட்சம் அளவிற்கு அந்தத் தொழிலகத்தை வளர்த்துள்ளார்.

இவருடைய ஆர்வத்தையும், தொழில்நுணுக்கத்தையும் கண்ட பெரும் தொழிற் சாலைகள் இவருக்கு நிறைய வாய்ப்புகளைக் கொடுத்து ஆதரித்து வருகின்றன. இப்படி, ஒரு ஆண் செய்கின்ற தொழிலை முதன் முதலாக ஒரு பெண்ணே முன்னின்று நடத்துவதால், தன்னுடைய இல்லறக் கடமையைக் கொஞ்சம் கூட விட்டுவிடாமல் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார். சான்றாக, சமையலிலும், சரி, வீட்டுப் பராமரிப்பிலும் சரி, அவரை மிஞ்ச எவரும் இல்லை என்று குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பித்து வருகிறார் சுந்தராம்பாள்.

இன்றைய வளர்ந்து வரும் சமுதாயத்தில் விண்ணிலிருந்து மண்ணுலகம் வரை விரிந்து பரவி சாதனைகள் படைக்க துடித்துக் கொண்டிருக்கும் ஒரு முன் மாதிரியான பெண்மணியாக சுந்தராம்பாள் திகழ்ந்து வருவது அவருக்கு மட்டுமல்ல பெண்ணினத்திற்கே பெருமை சேர்ப்பதாகும். இவர் தான் கற்ற இந்த வெல்டிங் தொழிலைப் பல பெண்மணிகளும் செய்வதற்கு முன் வர வேண்டும் என்கிற தன் விருப்பத்தையும் தெரிவித்துள்ளார். இவருடைய விருப்பம் நிறைவேற நாம் அனைவரும் வாழ்த்துவோமாக.

—நன்றி : ஈவ்ஸ் டச்

## முதல் கிரிக்கெட் பெண்மணி

உலகம் பூராவும் பரப்பரப்பாகப் பேசப்படும் விளையாட்டுகளில் கிரிக்கெட் முக்கியமானது. ஆண்களே அதிகமாக விளையாடும் இந்த விளையாட்டில் கிட்டதட்ட 20 ஆண்டுகளுக்கு முன்னதாக பெண்களும் பங்கு பெற்றிருக்கிறார்கள். இந்தியாவில் 1974-ஆம் ஆண்டு நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டி பெண்கள் பங்குகொண்ட போட்டி என்று சொல்லப்படுகிறது. அதில், சென்னையைச் சேர்ந்த சாந்தா ரங்கசாமி என்பவர் பெண்கள் கிரிக்கெட்டில் இந்தியாவிலேயே பங்குபெற்ற முதல் பெண்மணியாவார். அதே போல், தமிழ்நாட்டு அணியில் முதன்முதலாக கிரிக்கெட் விளையாட்டில் பங்குபெற்ற பெருமை திருமதி சுதா ஷா என்பவருக்கு உண்டு. இவர் முதன்முதலில் 100 ரன்கள் எடுத்த பெண்மணி என்ற பெருமையும் கொண்டவர்.

# புதியதோர் உலகம் காணத் துடித்த புரட்சிப் பாவேந்தர்

பன்மொழிப் புலவர் டாக்டர் கா. அப்பாத்துரை

தமிழகத்தில் எந்தத் தலைவர்களையும்விடக் கவிஞர் பாரதிதாசனுடனேயே மிகுதியாகப் பழகும்படி தமிழன்னை எனக்கு அருள் பாலித்திருக்கிறாள். இது பற்றி நான் மிகவும் பெருமைப் படுகிறேன். ஏனெனில், என் உளநோக்கில் அவர், கவிதையுலகில் ஒரு தலைசிறந்த கவியரசர் மட்டுமல்லர். காந்தியடிகள் போன்ற கனவியற் பெரியார். புலமையரசு மறைமலையடிகள், அறிவுலக அரசன் அண்ணா ஆகியோரைப் போன்ற தமிழாட்சித் திறம், அறிவாட்சித் திறம் உடையவர். பிளேட்டோ காலந்தொட்டு வழி வந்த புத்துலகச் சிற்பிகள் சமதருமச் சிந்தனைச் செல்வர்களிடையே அம்மரபின் முழுமைத் திறம் சான்ற ஒரு சமதருமப் புத்துலகப் படைப்பாளர் என்ற பன்முகச் சிறப்புடையவராய் விளங்கி வருகிறார்.

பாவேந்தருக்கு முன்னும் பின்னும் ஒப்பற்ற ஒளிமரபுப் பரம்பரைகள் உண்டு. பாரத விடுதலைப் போராட்டத்தில் மட்டுமின்றி, உலக நாடுகள் விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட்ட போர் வீரர்களிடையே ஒரு போர் வீரரின் உணர்ச்சியுடன் பாடிய ஒரே விடுதலைக்



கவிஞர் பாரதியார். அவருடன் ஒப்பிடத்தக்க மற்றொருவர் ஆங்கிலக் கவிஞர் பைரன் மட்டுமேயாவார். பாவேந்தரின் முன் மரபு இது. பன்னூறு கவிஞர்களைத் தோற்றுவித்து இன்றைய தமிழகத்தை வளப் படுத்தும் பாவேந்தர் கவிதைப் பரம்பரையே அவ்வேந்தரின் பின் மரபொளி ஆகும். உலகின் தலை சிறந்த சமதர்மக் கவிஞராகவும் அவர் விளங்குகிறார். இதில் அவருடன் ஒப்பிடக்கூடிய ஒரே கவிஞர் அமெரிக்காவின் விட்டியரே ஆவர்.

பாரதி புகழ் பாடுவதாகப் பாசாங்கு பண்ணி, பாரதிதாசன் புகழை மறப்பவன், மறக்கடிப்பவன் உண்மையான பாரதி பக்தனாகமாட்டான். அதுபோல பாவேந்தர் புகழ்பாடி அதனைப் பாரதி புகழுடன் இணைக்கத் தயங்குபவன் உண்மைப் பாவேந்தர் பக்தனாகமாட்டான். ஏனெனில், பாரதியார் உலகின் ஒப்புயர்வற்ற விடுதலைக் கவிஞன் என்றால், பாவேந்தர் அதுபோல உலகின் ஒப்புயர்வற்ற சமதருமக் கவிஞர் ஆவார். தமிழ்ப் பற்றிலோ, தமிழ் மரபினைப் போற்றுவதிலோ அவ்விரண்டில் புத்துருவாகிய புதுமையார்வத்திலோ, புரட்சியார்வத்திலோ, இருவருமே ஒருவருடன் ஒருவர் போட்டியிடத்தக்கவர் ஆவர். ஒருவர் ஒரு பண்பில் விஞ்சியவர் என்று தோன்றினால், மற்றொருவர் மற்றொன்றில் விஞ்சியிருப்பாராம் என்று காண்டல் எளிது. அதுமட்டுமன்று, பாவேந்தர் விஞ்சிய பண்புகளிலே பாரதியார் அவர் முன்னோடியாவார் என்பதையோ, பாரதியார் விஞ்சி நின்ற பண்பிலே, பாவேந்தர் அதே பண்பின் புதுமரபு அல்லது புதுவிளக்கமாக வளர்ச்சி நோக்குவதையும் எவரும் காணலாம்.

பாரதியார் அரசியல் விடுதலை பாடுவதில் மேம்பட்ட

> **சமதர்மம் ருசிகரமான வார்த்தை. நாட்டிலே இன்று பலராலும் பேசப்பட்டுவரும் இலட்சியம். பலராலும் என்றால், உண்மையிலேயே அந்த உயர்ந்த இலட்சியத்தின்படி சமூகம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்.**
>
> **—பேரறிஞர் அண்ணா**

வரானால், பாவேந்தர் சமுதாய, சமய விடுதலையுணர்வில் விஞ்சி நின்று, சமதரும மரபிலும் தமிழ் மரபிலும், அவரைத் தாண்டி நெடுந்தொலை ஒளி வீசியுள்ளார்.

பாரதியார் பெருமை அவர் காலத்திலோ, அவர் பாடிய பாரத விடுதலைப் போராட்ட நாளிலோ, அவர் பாடிய உருசியப் பொதுவுடைமைப் புரட்சியின் நாளிலோ தமிழக மக்களிடையே சரிவர உணரப் படவில்லை. பாரதிதாசன் வாழ்நாளிலும், பாரதிதாசன் பரம்பரை வளரும் இந்நாளிலும் தான் பாரதியாரின் பெருமை உணரப்படத் தொடங்கியிருக்கிறது. பாவேந்தர் இன்று வாழ்ந்திருந்தால், இன்றிருப்பதை விடப் பாரதியார் புகழை அவர் இந்தியா அளாவ, உலகளாவப் பரப்பியிருப்பார் என்பதில் ஐயமில்லை. இதுபோலவே பாரதியார் விடுதலைப் போராட்டக் கால முழுவதும் வாழ்ந்திருந்தால், அவர் பாவேந்தர் பாடற்புகழை இந்தியா அளாவ, உலகளாவக் கட்டாயம் பரப்பியிருப்பார் எனலாம்.

அவர் சிறந்த இலக்கணப் புலவர். வருங்காலத் தமிழகம் என்ற ஏடு அச்சாகும் சமயம் அவர் என்னுடன் என் வீட்டில் தங்கியிருந்தார். இக்காலத்தார் மெல்ல மறைந்து வரும் தமிழ் மரபுகளைக் கண்டிப்பவர் அவர். எனவே சந்திப் பிழைகள் இல்லாமல், அதனைத் திருத்தும் பொறுப்பை அவர் வலிந்து மேற்கொண்டார்.

'குயில்' வெளியீடு' கவிதைக்காக மட்டும் தொடங்கப்படவில்லை. திருக்குறள் ஆராய்ச்சி மெய்யுரைக்காகவும் தொடங்கப்பட்டிருந்தது. என்னையும் கவிஞர் சுரதா போன்றோரையும் உடன் கொண்டே அவ்வுரை விரிக்க அவர் எண்ணியிருந்தார். ஆகவே வள்ளுவர் உள்ளத்தை உள்ளவாறு அறிவதற்குரிய ஆராய்ச்சி முறைகளைப் பற்றி அவரிடம் உசாவும் வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று. அவ்வகையில் பாவேந்தரின் திட்டங்களும் அடிப்படைக் கருத்துக்களும் எனக்கு வியப்புத் தந்தன. புத்தொளியும் தந்தன. ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடனும், பகுத்தறிவுக் கண்ணோட்டத்துடனும், வரலாற்று நோக்குடனும் செய்யப் பெற்ற தமிழரின் சைவ சித்தாந்தம், தமிழ் வைணவ மரபுகள் தமிழிலக்கிய, சங்க இலக்கிய மரபுகள், தமிழ்ச் சொல்லாய்வுகள் ஆகியவற்றின் மூலமே திருக்குறளின் பின்னணியிலுள்ள வள்ளுவ உள்ளம் காண முடியும் என்றார்.



வெளித் தோற்றத்தை நம்பி பலர் பாவேந்தரைச் சமயத்தில் எதிரி என்று நினைப்பதுண்டு. போலிச் சமயம், அதாவது சமயப் போர்வைக்குள்ளிருந்து கொண்டு செய்யப்படும் மனித இனச் சுரண்டல் முறைகளுக்கு அவர் விடாப்பிடியாக எதிரிதான். ஆனால், உண்மைச் சமயத்தை எந்தப் பக்தரையும் விட அவர் நன்கறிந்து அறிவிப்பவர் என்பதை அவரது தொடக்க காலச் சுப்பிரமணியர் துதியமுது மட்டுமின்றி அவரது முழுச் சீர்திருத்தக் காலக் கவிதையாகிய உலக அன்னையும் காட்டும். பாரதியாரோ, பட்டினத்தார் போன்ற பக்திக் கவிஞரோ கூட உலக அன்னை காட்டும் கற்பனை உயர்ச்சியைச் சென்று எளிதில் எட்டிவிடமுடியாது.

பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவருமே உலகின் ஒப்பற்ற புரட்சிக் கவிஞர்கள்தாம். ஆனால், இருவர் புரட்சிகளுமே இடைக்காலத் தமிழரின் போலி மரபுகளைத்தான் எதிர்த்தன. சங்க காலத் தமிழ் மரபையும் அதற்கு முற்பட்ட பகுத்தறிவுக் கால மரபையும் அவை

புதுப்பித்து வளர்த்தன.

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும்!
யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்!

—என்ற பண்டை ஒருலகச் சமதர்மக் குறிக்கோளைப் புதுப் பித்து, அவ்வழி புதிய தமிழகம், புதிய இந்தியா, புதிய உலகம் படைக்கப் பாடுபட்ட முழுநிறை புரட்சிக் கவிஞர் பாவேந்தரே யாவார்.

இளங்கோ, வள்ளுவனைத் தமிழகத்துக்கு அறிமுகப்படுத் தியவர் பாரதியார்.

ஆம். 18-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சிலப்பதிகார நூலைப் பற்றிப் பலரும் அறிந்திருக்கவில்லை. ஆனால், பாரதியார் இளங்கோவின் சிறப்பினை எப்படியோ உணர்ந் திருந்தார். திருவள்ளுவரைச் சமயவாதிகள் ஒரு நாயனா ராக்கிக் குடத்தினுள் இட்ட விளக்காக்கி வைத்திருந்தனர். வள்ளுவரின் பெருமையையும் பாரதி அறிந்திருந்தார். அறிவார்ந்த அந்த உண்மையின் விளைவே, பாரதி.

'யாமறிந்த புலவரிலே
கம்பனைப்போல்

வள்ளுவர்போல் இளங்கோவைப் போல
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை'

என்று அவ்விருவரையும் ஏற்றிப் புகழ்ந்த கவிதைத் தோற்றம்.

பாரதியார் அடியெடுத்துத் திசைகாட்ட, அவ்வழி நின்ற முழுமைத் தமிழ்க் கவியரசராகப் பாவேந்தர் விளங்குகிறார்.

---

## பாவேந்தரைப் பின்பற்றினால்

எந்தச் சூழ்நிலையிலும் அவசர அவசரமாகக் கவிதை, எழுதி, அதனை அப்படியே அனுப்பிவிடும் பலர் இன்று இருக்கிறார்கள். அவை பெரும் பாலும் அரை வேக்காடுகளாகவே இருக்கும். பாவேந்தரைப் பொறுத்தவரை அப்படிக் கவிதைகள் எழுதுவதில்லை. கவிதையைச் சொல்லி, 'எழுது' என்பார். சொல்லச் சொல்ல எழுதியபின், படிக்கச் சொல்லிக் கேட்பார். வார்த்தைகளை, வரிகளை மாற்றி எழுதச் சொல்லி, பிறகு படிக்கச் சொல்வார். அதைக் கேட்டு, அவர் மனதுக்கு நிறைவாகத் தெரிந்தாலே நகலெடுத்து அனுப்பச் சொல்வார்.

இன்று, கவிதை படைப்போர் இந்த முறையினைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்துப் பின்பற்றினால், அது அவர்களுக்கும் நல்லது நமது தமிழுக்கும், இலக் கியத்திற்கும் கூட நல்லது.

—கவிஞர் சாமி பழனியப்பன்

---

## அடுத்த இதழ்...

### 'தமிழரசு'

16-5-1996 தமிழரசு இதழ், நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற அனைத்துத் தேர்தல் முடிவுகளையும் தாங்கி, கூடுதலான பக்கங்களுடன் எழிலுடன் வெளிவருகிறது.

**முதல் அட்டை:** மே நாள் விளக்கமாக, சென்னைக் கடற் கரையில் இலங்கிக் கொண்டி ருக்கும் உழைப்பாளர் சிலை.

**இரண்டாம் அட்டை:** கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்தர் பாறை

**நான்காம் அட்டை:** கொடைக்கானல் ஏரியின் கோலமிகு காட்சி

படங்கள் உதவி: சுற்றுலாத்துறை

## கோடைவிழா

மலைகளின் இராணி என்று எல்லோராலும் அழைக்கப்படும் ஊட்டியில், 3.5.96 முதல் 27.5.96 முடியவும், கொடைக்கானல், ஏர்க்காடு, கல்ராயன் குன்றுகள், ஏலகிரி, ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் 18.5.96 முதல் 26.5.96 முடிய கோடை விழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ள தாக, தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அறிவித்துள்ளது.

# சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

–டாக்டர் முத்து குணசேகரன்–

**டாக்டர் முத்து குணசேகரன் சென்னைப் பல்கலைக் கழக அஞ்சல் வழிக் கல்வி நிறுவனத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்று கிறார். சுதந்திரப் போராட்டத்தில் அரும்பங்கு ஏற்றவரும், தொழிற்சங்க இயக்கம் காண்பதில் இந்தியா முழுமைக்கும் முன்னோடியாக இருந்தவருமான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரைப் பற்றி, தெளிவுபட விளக்குகிறார் இக்கட்டுரையில்:**

இரஷ்யத் திருநாட்டில் யுகப்புரட்சி நிகழ்த்திய மாவீரன் லெனினுக்கு இணையாகவும், மேலை நாட்டின் மாபெரும் மேதை ட்டிராஸ்கிக்கு ஈடாகவும் பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றிப் புகழப்பட்ட சீர்மிகு தலைவர் ஆவார் சிங்காரவேலர். அதனாற்றான் சிங்காரவேலர், சிந்தனைச் சிற்பி என்றழைக்கப்படுகிறார்.

சிங்காரவேலர் 1860-ஆம் ஆண்டு, பிப்ரவரித் திங்கள் 18-ஆம் நாள் சென்னை மயிலாப்பூரிலுள்ள நடுக்குப்பத்தில், மீனவர் குடும்பத்தில் பிறந்தார். சிங்காரவேலரின் குடும்பம் செல்வக் குடும்பம். கி.பி. 1800-ஆம் ஆண்டில் முண்டகக்கண்ணி அம்மன் ஆலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய்க்கு அறக்கட்டளை நிறுவுமளவுக்குச் செல்வமும் செல்வாக்கும் பெற்றிருந்த குடும்பம் சிங்காரவேலரின் குடும்பம் என்பதிலிருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம்.

இன்று வெலிங்டன் கல்லூரி இடம் பெற்றுள்ள, 22 சவுத் பீச் ரோடு என்பது சிங்காரவேலர் வாழ்ந்த இடம். 1904-இல் திருவல்லிக்கேணி 'கோவாப்பரேட்டிவ் அர்பன் சொசைட்டி' என்னும் கூட்டுறவு நிறுவனம் தோற்றம் பெறக் காரணமானவர்களில் அவரும் ஒருவர்.

## சிங்காரவேலரின் திருமணம்

காதல் மணம் கமழும் கலப்பு மணம்.

தன் இளமைக் காலத்தில் கி.பி. 1889-இல் சிங்காரவேலர் காதல் மணம் செய்துகொண்டார். இது ஒருவகையில் கலப்பு மணமாகவும், சடங்குகளற்ற சீர்திருத்த மணமாகவும் இருந்தது. தொடக்கக் காலத்தில் புத்தமதப் பற்றாளராக இருந்து, அயோத்திதாஸ் பண்டிதர் போன்றவர்களுடன் இயங்கினார்.

1913 முதல் 1916 வரை மகாஜன சபை உறுப்பினராகவும் 'பப்ளிக்ஹெல்த்' கமிட்டியின் செயலாளராகவும் இருந்தார். 'டிரிப்ளிகேன் லிட்ரரி சொசைட்டி' என்னும் பெயரில் திருவல்லிக்கேணியில் இருந்த அறிவார்ந்த அன்பர் கூட்ட உறுப்பினராகவும் இருந்தார். அரசியல் ஈடுபாட்டினால் 1913 முதல் அரசியல் இயக்கங்களில் பங்கு பெற்றார். லட்சுமணராசு, அயோத்திதாஸ் பண்டிதர் இவர்களுடன் இணைந்து சென்னையில் சொற்பொழிவுகள் ஆற்றி மக்களுக்குத் தொண்டாற்றினார். காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய உறுப்பினராகவும், தொண்டர் படைத் தளபதியாகவும் இயங்கினார்.



## சிங்காரவேலரின் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்தது ஆங்கில அரசு

அன்றைய கிலாபட் இயக்கத்தின் தீவிர உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார். தமிழில் 'தொழிலாளன்', ஆங்கிலத்தில் 'ஹிந்துஸ்தான் லேபர் 'கிஸ்ஸான் கெசட்', 'நான். கோவாப்பரேட்டர்' ஆகிய பத்திரிகைகளை நடத்தினார்.

☺ நவீன உலகின் முதன்மையான ஆச்சரியங்களில் ஒன்று பத்திரிகை.

—ஜெ.ஏ. பிரோடஸ்

☺ ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள், அவனுடைய பத்து விரல்கள்

—ராபர்ட் கோலியர்

அவை அரசால் பறிமுதல் செய்யப் பட்டன. காங்கிரஸ் தொழிலாளர்களுக்கு உதவாது என்பதை உணர்ந்து, தொழிலாளர்களுக்கு உறுதுணையாக அமைப்புகளைத் தோற்றுவிக்க முயன்றார். 1922-லேயே சோவியத்து ரஷ்யாவுடன் இரகசியத் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

**தொழிற்சங்க இயக்க முன்னோடி**

1923-இல் 'இந்துஸ்தான் லேபர் கிஸ்ஸான்' கட்சி என்ற பொதுவுடைமைக்கும் முந்திய கட்சியைத் தோற்றுவித்தார். செங்கொடியை ஏற்றி சென்னையில் மே நாள் கொண்டாடினார். தொழிற்சங்க இயக்கம் காண முன்னோடியாக இருந்து, தொழிலாளர்கள் மத்தியில் சிங்காரவேலர் விழிப்புணர்ச்சி ஏற்படுத்திவருவதைக் கண்டு, அதனைப் பொறுக்க இயலாத அந்நியர் ஆட்சி ஆயுதம் கடத்தி பிரிட்டிஷ் அரசைக் கவிழ்க்க முயன்றார் என்று குற்றம்சாட்டிச் சிங்கார வேலர் மீது 'கான்பூர் சதி வழக்கு' என்ற நூதன வழக்கைத் தொடுத்தது.

**துப்பாக்கி மிரட்டலுக்கும் அஞ்சாத துணிவு கொண்ட நெஞ்சத்தார்**

'பி அண்ட் சி மில்' போராட்டத்தில் கலந்து கொண்டு ஊர்வலத்தில் தலைமை தாங்கினார். வெள்ளை அதிகாரி சுட்டு விடுவேன் என்று மிரட்டிய போது - 'சுடு' என்று சிங்கார வேலர் நெஞ்சைக் காட்டினார். 1921-இல் சட்டமன்ற மறியல் நடத்தினார்.

1922-களில் தொழிற்சங்கப் பிரச்சினைகளை முன்நிறுத்தி 'சுதர்மா' என்ற ஆங்கில இதழில் தொடர்ந்து எழுதினார். கானாட்டுக் கோமகன் புறக்கணிப்பு, சைமன் புறக்கணிப்பு எனப் பல புறக்கணிப்புகளை மேற்கொண்டார். அந்நியப் பொருள் புறக்கணிப்பு செய்திடும் அறப்போரை ஏற்று அரசுக்கு எதிரான ஒத்துழையாமையை மேற்கொண்டு 1921-இல் தன் வக்கீல் அங்கிக்குப் பொது இடத்தில் தீயிட்டார்.

**சில ஆண்டுகள் சில நிகழ்வுகள்**

1922-இல் இந்துஸ்தான் பஞ்சாயத்தில் சுப்பிரமணிய சிவாவுடன் தலைவராக இருந்தார். 1922-இல் சிங்கார வேலரின் இல்லம் பிரிட்டிஷ் அரசால் பறிமுதல் செய்யப்பட்டது. 1923-இல் சுயராஜ்யக் கட்சியில் பணியாற்றினார். 1925 காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் கொடியேற்றினார். சென்னை நகரசபை உறுப்பினராகத் தேர்வு பெற்றார். 1927-இல் சென்னைக்கு வந்த சக்லத்வாலாவை வரவேற்க அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டார். கான்பூரில் பொதுவுடைமைக் கட்சியைத் தொடங்கிவைத்தார்.

ஆங்கிலேயரிடமிருந்து காந்தி வாங்கி இருக்கும் சுதந்திரம், பாமரர்களை அடிமைப் பிடியிலிருந்து விடுவிக்காது என்று திண்ணமாய் நம்பினார் சிங்காரவேலர். தனது இந்த எண்ணத்தை மக்கள் முன்னே எடுத்து வைக்கவும் அவர் தயங்கவில்லை. சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் பரிபூரண சுதந்திரத்திற்கான கொள்கையை முன்வைத்தார்.

**நாம் போற்றும் தலைவர்கள் போற்றிய தலைவர் சிங்காரவேலர்**

ஆஷ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நீலகண்ட பிரம்மச்சாரி பல ஆண்டுகள் சிங்காரவேலர் வீட்டில்தான் தங்கி இருந்தார். சிங்காரவேலரின் கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் தங்களை முழுமையாக ஆட்படுத்திக் கொண்டனர் குத்தூசி குருசாமி, ப. ஜீவானந்தம் இருவரும் சிங்காரவேலரின் வாரிசுகள் எனலாம். பாரதியார் சிங்காரவேலரின் மடியில் உயிர் நீத்தார். சிங்காரவேலர் வ.உ.சிக்குத் துணையாக இருந்தார். பாரதிதாசன் 'போர்க்குணமிகுந்த செயல் முன்னோடி பொதுவுடைமைக்கே இவர் பின்னாடி' என்று பொதுவுடைமைக்கு இவர் பின்னால் போக வேண்டுமென்றார். குடியரசு,

புரட்சி, சமதர்மம், புதுவை முரசு, பகுத்தறிவு, புதுவுலகம், சுதர்மா, தொழிலாளன், 'லேபர் கிஸ்ஸான் கெசட் ஆகிய பத்திரிகைகளில் எழுதினார். உலக முழுமையுள்ள தமிழர்கள் கேள்வி கேட்க அவற்றிற் கெல்லாம் சிங்காரவேலர் பதிலளித்தார். பெரியார் "நான் மதித்த ஒரே தலைவர் சிங்கார வேலர்'' என்றார். திரு.வி.க. சிங்காரவேலரைத் தனது ஆசிரியரென்றார்.

### பெரியாருக்கு வழிகாட்டி

பெரியார் ரஷியா சென்று வர உதவியவர் சிங்கார வேலர் ஆவார் பெரியார் இலண்டனில் பெர்ரி மந்திரி சபைக்கு எதிராகப் படித்த கட்டுரை சிங்கார வேலரின் ஆலோசனைப்படி அவராலேயே தயாரிக்கப்பட்ட தாகும். சுயமரியாதைச் சமதர்மக் கட்சி தோன்ற ஆலோசனை தந்தார். 400-க்கும் மேற்பட்ட சுய மரியாதை சமதர்ம மன்றங்கள் உருவாயின. சமூக சீர்திருத்தம் மட்டுமே தனது பணி. பொது வுடைமை தமது பணியல்ல என்றவுடன் பெரியாரிடமிருந்து சிங்காரவேலர் விலகினார். இருவரின் பாதைகளும் வேறாயின.

சென்னையில் மண்ணெண் ணெய்க் கிளர்ச்சிக்குத் துணை நின்றார். சாக்கோவான்சிட்டி என்ற அமெரிக்கத் தொழிற் சங்கத் தலைவர்கள் அமெரிக் காவில் கொல்லப்பட்டபோது சென்னையில் அரசை எதிர்த்துக் கண்டனக் கூட்டம் நடத்தினார். அஞ்சாநெஞ்சன் அழகிரி மதித்த பெருந்தலைவராக விளங் கினார். விருதுநகர் மாநாடு

---

☺ கங்கை நீர் சிறந்தது; அதினினும் சிறந்தது அபிஷேக நீர்; அதினினும் உயர்ந்தது உழைப் பாளிகளின் முகத்தில் துளிர்க் கும் வியர்வை நீர்

**–திருமுருக கிருபானந்த வாரியார்**

---

சேலம், மாநாடு, சென்னை மாநாடு, மன்னார்குடி மாநாடு எனப் பல சுயமரியாதைச் சமதர்ம மாநாடுகளில் தலைமை தாங்கினார்.

### அண்ணா புகழுரை

சென்னையில் நாத்திக மாநாட்டை முதன் முதல் நடத்தி முதல் நாத்திகராகத் திகழ்ந்தார். இரஷியா உட்பட பல மொழி களை அறிந்தவர். சிங்கார வேலரின் நூலகம் 20,000 புத்தகங்களைக் கொண்டிருந்தது. அனைத்தையும் பொது வுடைமைக் கட்சிக்கு உயிலெழுதி வழங்கிவிட்டார் சிங்காரவேலர்.

### இரயில்வே தொழிற்சங்க முன்னோடி

40,000 பேர்களைத் திரட்டி முகுந்தலால் சர்க்காருடன் வட இந்திய இரயில்வே தொழி லாளர்களுக்கு வெற்றியீட்டித் தந்தார். தென்னிந்திய இரயில்வே போராட்டத்தில் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார்.

காட்டே, அமீர் ஹைதர்கான், கே.டி.கே. தங்கமணி, ஏ.எஸ்.கே. ஐயங்கார், கே. முருகேசன் உட்படப் பலருக்கும் வழிகாட்டி யாக இருந்தார். தன் வீட்ட வர்கள் கலப்பு மணம் செய்து கொள்ளவும், வெளி நாட்டவரை மணக்கவும் காரணமாக இருந்தார்.

அந்நாளில் குழந்தைகளுக்கும் பொருட்களுக்கும் பொது வுடைமை உணர்வுடைய பெயர் களை வைத்தார். நகரசபை உறுப்பினராக இருந்த காலத் திலேயே யுத்த ஒழிப்பிற்கும், உலக சமாதானத்திற்கும் குரல் கொடுத்தார். ஏழைக் குழந்தை களுக்கு நகர சபையில் சத்துணவுத் திட்டம் கொண்டு வந்தார்.

பொதுவுடைமைக் கட்சித் தடை நீக்கப் போராடினார்! வெற்றி பெற்றார்.

1939-இல் பொதுவுடைமைக் கட்சி அரசால் தடுக்கப்பட்டது; அப்படித் தடுக்கப்படக் கூடாது எனக் கூறி அத்தடையை நீக் கிடப் போராடி வெற்றி பெற்றார். அடிமை இந்தியாவில் பிறந்த சிங்காரவேலர் 1946-இல் விடுதலை அடையாத இந்தியாவில் மறைந்தார். 'யுத்தம் இந்த உலகைவிட்டு ஒழியட்டும், எங்கும்' அமைதி தழுவட்டும்' என்ற உயர்ந்த எண்ணத்துடன் அவர் இறுதி மூச்சு அடங்கியது.

உழைக்கும் மக்களுக்காகத் தொழிற்சங்கங்கள் தோன்ற வேண்டுமென்ற தலைவர்களில் மூத்தவராகச் சிங்காரவேலர் திகழ்ந்தார். சிங்காரவேலருக்குப் புரட்சி வழியே பிடித்த வழியாக இருந்தது.

பொருளாதார விடுதலை யுடன் சாதி சமய ஒழிப்பிற்கும் பாடுபட்ட பெருந்தலைர் சிங்காரவேலர். கூலி உயர்வுடன் தொழிலாளர்கள் நிறைவடையக் கூடாது; தொழிலில் பங்கு பெற வேண்டும் என்பது சிங்கார வேலரின் தொழிற்சங்க கொள்கை யாக இருந்தது.

# அறப்புரட்சிக்கு வித்திடும் தொழிலாளர் இயக்கம்

எனது வாழ்க்கை, தொடக்கத்தில் சமயப் பணிகளில் ஈடுபட்டது. அதனால் பல சமய ஆராய்ச்சிப் பேறு எனக்குக் கிடைத்தது. அவ்வாராய்ச்சிப் பொதுமை உணர்ச்சியை உண்டாக்கியது. சமயங்களின் அடிப்படையாயுள்ள பொதுமை சமரசம் ஏன் உலகில் பரவவில்லை என்று யான் எண்ணுவேன். சிற்சிலபோது ஆழ எண்ணுவேன். எனக்கு ஒன்றும் விளங்குவது இல்லை. சிங்காரவேலர் செட்டியார் கூட்டுறவு சிறிது விளக்கம் செய்தது. அவ்விளக்கம் பொதுமையை உலகில் பரப்பி நிலை பொறுத்த வல்லது. காரல் மார்க்ஸ் கொள்கை என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் இடம் பெறச் செய்தது.

காந்தியடிகளின் அகிம்சா தர்மத்தில் என் மனம் சென்றது. அகிம்சை நல்லதே. அது வெறும் தத்துவ உலகிலும், கவி உலகிலும் நிலவிக் கொண்டிருக்கும்; வாழ்க்கை உலகில் ஒன்றி நிலவுமா? என்று ஐயுறுவேன். சிலவேளை ஐயம் முளைத்தெழுந்து என் நெஞ்சைத் துளைக்கும், துளைப்பு, சிற்சில சமயம் மனநோயையும் உண்டு பண்ணும். அந் நோயைப் போக்க, மார்க்ஸ் மருத்துவராய் என் மானத உலகில் தோன்றுவார். மார்க்ஸ் அருளியுள்ள கொள்கை உலகில் பரவினால் வாழ்க்கை அகிம்சையில் ஒன்றாவதாகும் என்னும் நுட்பம் எனக்குச் செவ்வனே விளங்கியது.



ஒரே வயிற்றில் பிறந்தவர் பொருளைக் குறித்துப் போரிடுவதும், மன்றம் ஏறுவதும் உன் உள்ளத்தைப் புண்படுத்தும். உடன் பிறந்தவரிடத்தில் போர் மூட்டாத அவரை மன்றம் ஏற்றாத ஆட்சி முறை அமையுமா என்று ஏக்குறுவேன். மார்க்ஸ் நினைவு அவ்வேகத்தைப் போக்கும். அமைதி நினைவு தோன்றுபோதெல்லாம் மார்க்ஸ் நினைவும் உடன் தோன்றுவது வழக்கமாகியது. மார்க்ஸ் கொள்கைக்கு ஆக்கம் தேடும் அமைப்பு தொழிலாளர் இயக்கம். இவ்வியக்கத்தில் இறங்கி தொண்டுபுரிய கீர் 'ஹார்டியின் காட்சியும், வெங்கடேச குணாமிர்த வருசினி சபையின்' அழைப்பும் துணைநிற்கின்றன. வாழ்க்கையில் என்னென்னவோ மாறுதலும், வளர்ச்சியும் நிகழ்கின்றன. இவ்விசித்திரத்தை யான் என்ன என்று விளம்புவேன்?

**இந்தியாவிலேயே முதன் முதலில் தொழிற்சங்கம் உருவாகியது சென்னையில்தான். இதன் தோற்றத்திற்குக் காரணமானவர் தமிழ்த் தென்றல் திரு.வி.க. ஆவார். தொழிலாளர் இயக்கம் குறித்து அவரது விளக்கவுரை இங்கே இடம் பெறுகிறது.**

மார்க்சியம் பொருட் பொதுமையை அறிவுறுத்தும் நாத்திகமன்றோ என்று சிலர் என்னைக் கேட்பதுண்டு. மார்க்சியம் என்று சிலர் நாத்திகப் பிரச்சாரஞ் செய்வதும் எனக்குத் தெரியும். என் மனதுக்கு மார்க்சியம நாத்திகமாகத் தோன்றவில்லை. எப்படி?

மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், புத்தர் தர்மமும், அருகர் அகிம்சையும், கிருஷ்ணன் நிஷ்காமியமும், குமரன் அழகும், தட்சிணாமூர்த்தியின் சாந்தமும் பொதுமை அறத்தை வேராகக் கொண்டவை. அப்பொதுமை அறம் ஏன் ஓங்கவில்லை? சில தடைகள் மறிக்கின்றன அவை யாவை? சாம்ராஜ்யங்கள், மடங்கள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், கண்மூடி பழக்கவொழுக்கங்கள் முதலியன. இவற்றைப் படைத்து வளர்ப்பது எது? முதலாளி தொழிலாளி

வேற்றுமை. இவ்வேற்றுமையை ஒழிக்கவல்லது பொருட் பொதுமை; பொருட் பொதுமை. மகம்மதுவின் தெய்வ ஒருமையும், கிறிஸ்துவின் அன்பும், பிறவும் மன்பதையின் கால் கொள்வ தற்குத் துணை செய்யும் ஆற்றல் வாய்ந்தவை என்னும் நுட்பம் எனக்குப் புலப்பட்டது. அதனால் மார்க்சியம் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

உலகம் போராட்டத்துக்கும் இரையாதல் கண்கூடு. மூலம் என்ன? இது குறித்துத் தனித்தனி ஆராய்ச்சி செய்தவர் பலர். அவருள் சிறந்தவர் காரல் மார்க்ஸ். உலகப் போராட்டத் துக்கு மூலமாக நிற்பது முதலாளி தொழிலாளி என்னும் வேற்றுமை உணர்வென்பது மார்க்ஸ் கண்ட உண்மை. இது நடுநிலையில் நின்று போர் மூலத்தை ஆராயும் ஒவ்வோர் அறிஞர்க்கும் எளிதில் புலனாகும்.

பண்டைநூலில் சாம்ராஜ் யங்கள் பெருகவில்லை. அதனால் முதலாளி தொழிலாளி உணர்வு, வளராமற் கிடந்தது. இந்நாளில் சாம்ராஜ்யங்கள் பெருகிட உள்ளன. அப்பெருக்கம் முதலாளி தொழிலாளி வேற்றுமை உணர்வை வளர்ப்பதாயிற்று. அவ்வளர்ச்சி வாழ்க்கையில் போராட்டத்தைப் புகுத்தியது. போராட்டத்தை ஒழிக்கும் மருந்து காரல் மார்க்சுக்குக் கிடைத்தது. அது, பொதுமை அறத்தை நிலை பெறுத்தவல்ல பொருளாதார சமரசம்.

மார்க்ஸ் கண்ட பொருட் பொதுமை, உலகில் புற அமைதியை நிலவச் செய்யும்

> **அன்பென்பது ஏசுவும் புத்தரும் போல் எல்லாரிடத்தும் காட்டும் நேயம். அது அறமாகவும் அற வினைகட்கெல்லாம் காரண மாகவும் கருதப்படும்.**
>
> **-மொழிஞாயிறு**
> **ஞா. தேவ நேயப்பாவாணர்**

மாண்புடையது. அக அமைதியை மகம்மது, கிறித்து அருகர், புத்தர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கை நிலைபெறச் செய்யும். அக அமைதிக்குப் புற அமைதி வேண்டதாயிற்று.

புற அமைதியை உலகில் நிலவச் செய்யும் வல்லமை வாய்ந்த மார்க்சியத்தை நாத்திகம் என்று எப்படித் தள்ளுவது? மார்க்சியத்தைத் தள்ளுவது சான்றோரின் அமைதிச் செல்வத்தைத் தள்ளுவதாகும். போராட்டத்தை அழைப்ப தாகும்.

சான்றோர் அருளிய பொதுமை அறத்துக்கு ஆக்கந்தேடவே யான் மார்க்ஸ் பொருட் பொதுமைக் கொள்கையைத் தழுவுகிறேன். மார்க்சியத்தைச் சான்றோரின் மூலக்கொள்கைக்கு மாறாகப் பயன்படுத்தும் இயக்கங்களில் என் மனம் ஈடுபடுவதில்லை.

மார்க்சியம் முழுமையதா? குறையுடையதா? எதிலுங் குறையுண்டு. மார்க்சியத்திலும் சிறு குறையுண்டு. என்ன குறை? அதன் கண் சத் என்னும் நுண் பொருள் வெளிப்படையாகக் காணப்படாமை. மார்க்சியத்தில் 'சத்' என்னும் செம்பொருள் சேர்ந்தால் அது நிறைவுடைய தாகும்.

மார்க்சியம் சமதர்மத்தை அறிவுறுத்துவது. சமதர்மத்தில் 'சத்' தானே சேரும். 'சத்' தைக் கொண்ட சமதர்மமேசன்மார்க்க மென்பது. சன்மார்க்கம் எது? மார்க்சியமும், மகம்மது, கிறிஸ்து, புத்தர், அருகர், கண்ணபிரான், குமரன், தட்சிணாமூர்த்தி முதலியோர் கொள்கையுஞ் சேர்ந்த ஒன்று சன்மார்க்கம். இது எனத கல்வி கேள்வி ஆராய்ச்சி அனுபவங்களின்றும் கனிந்த உண்மை.

முதலாளி தொழிலாளி வேற்றுமை உணர்வு சன்மார்க் கத்தை வளர விடாது. சன் மார்க்க வளர்ச்சிக்கு, முதலாளி தொழிலாளி வேற்றுமை உணர்வு பொன்றியே தீர்தல் வேண்டும். வேற்றுமை உணர்வு எப்படிப் பொன்றும்? இதற்குப் புரட்சி தேவை. புரட்சிக்கு உரியது தொழிலாளர் இயக்கம் என்று சொல்ல வேண்டுவ தில்லை. ஆதலின் யான் புரட்சி மனப்பான்மையுடன் தொழிலாளர் இயக்கத்தில் இறங்கினேன்.

புரட்சி இருவகை. ஒன்று அறவழியில் நிகழ்வது. மற்றொன்று மறவழியில் நிகழ்வது. அது அறப் புரட்சி. இது மறப்புரட்சி. உலகைச் சீர் செய்ய அறப்புரட்சி இடம் பெறாத வேளையில், மறப்புரட்சி அவ்விடத்தில் தானே நுழையும். இரண்டாலும் விளையும் பயன் ஒன்றாகுமா? ஒல்லும் வகை அறப் புரட்சிக்கு இடம் தருவதே அறிவுடைமை. இல்லையேல் மறப் புரட்சி எழும். எனது மனதுக்கு இயைந்தது அறப்புரட்சியே. அறப் புரட்சி

வாயிலாகச் சன்மார்க்கத்தை ஓம்பவே யான் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டேன்.

இந்நாட்டில் தொழிலாளர் இயக்கம் தோன்றி இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இருபத்தைந்து ஆண்டு அனுபவம் எனக்குண்டு. புரட்சி ஏன் உச்சநிலையை அடையவில்லை? சாது மத வெறி, சம்பிரதாயக் கட்டு, மூடவழக்கவொழுக்கம், மூர்க்கப் பிடிவாதம், முதலாளி அமைப்புகளில் மோகம், தலைமைப் போராட்டம், விட்டுக் கொடுத்தல் இன்மை முதலிய தளைகள் புரட்சியைத் தகைந்து நிற்கின்றன என்று எனது அனுபவம் சொல்கிறது. இத் தளைகளை உடைத்தெறியத் தோன்றிய இயக்கங்கள் பலப்பல. அவற்றுள் சிறந்தது தொழிலாளர் இயக்கம். இது தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டவர்க்கு வியப்பாகத் தோன்றாது.

**(1944-இல் வெளிவந்த திருவி.க. வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் நூலிலிருந்து)**




அமெரிக்க நாட்டில் உள்ள தேசிய புற்றுநோய்க் கழகம் காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிடுவதன் மூலம் புற்றுநோய் பரவுவதைத்தடுக்க முடியும் என்ற நல்ல செய்தியை அறிவித்துள்ளது. பழவகைகளில் பளிச்சென்ற நிறமுள்ளவைகளும் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு வண்ணப் பழங்களும் கேரட், இனிப்பான உருளைக் கிழங்கு, பூசணிக்காய் போன்றவை புற்றுநோய்க் கிருமிகளை மேலும் பரவாமல் தடுக்கின்ற சக்தி வாய்ந்தவை என்று தெரிவிக்கப் பட்டது. தக்காளியும், காலிப்ளவரும், டர்னிப்பும், முட்டைக் கோசும் புற்றுநோய்க் கிருமிகளை அண்டவிடாமல் தடுக்கக்கூடிய சக்தி வாய்ந்த சத்துக்களைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். அண்மையில் வெளியிடப்பட்டுள்ள இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சி அறிஞர்கள் கீரை வகைகளை உண்பதன் மூலம் புற்றுநோயைத் தடுக்க முடியும். குறிப்பாக, கீரைகளில் அதிகப் பசுமை கொண்ட கீரை வகைகளே முதலிடம் வகிக்கின்றன.

பழ வகைகளில் ஆரஞ்சு, எலுமிச்சை, தர்பூசணி மற்றும் அன்னாசிப் பழங்கள் புற்று நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றிருக்கின்றன. எனவே, பழவகைகளையும், காய்கறி களையும் அதிகமாக உணவில் பயன்படுத்தி புற்றுநோய் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாமே!

# மூலிகைகளின் முக்கியத்துவம்

டாக்டர் திருமதி ஜி.வி. சத்யவதி



நினைவுக்கு எட்டாத காலத்திலிருந்தே மூலிகைகள் மானுட வாழ்வோடு இணைந்துள்ளன. ஆதிமனிதன், சோதனையாகவோ தவறாகவோ உணவு மூலங்களைக் கண்டறிந்தது போலவே, இயற்கையிலிருந்து மூலிகைகளைக் கண்டறிந்தான். அருகாமையில் இயற்கையாகத் தோன்றிய மூலிகைகளில் இருந்து அவன் இதைக் கண்டறிந்தான். எனவே, மனிதன் பயன்படுத்திய மிகப் பழைமையான மருந்துகள் இந்த மூலிகைகளேயாகும்.

**மரபுவழி மருந்துகள்**

உலகில் எல்லா முக்கிய மருத்துவ முறைகளும் மருந்திற்கு இந்த மூலிகைகளையே பெரிதும் நம்பியிருக்கின்றன. இன்றும் கூட, கசகசாவில் இருந்து மார்பின், லவங்கத்திலிருந்து டிஜிடாலிஸ் கிளைகோஸைட்ஸ், மற்றும் பல மூலிகைகளில் இருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆங்கில வைத்திய முறையான அலோபதி மருத்துவ முறையில் இவை பயன்படுகின்றன. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட இந்திய மருத்துவ முறைகளான ஆயுர்வேதம், சித்தா, யுனானி, ஓமியோபதி இயற்கை வைத்திய முறைகளில் பல மூலிகை மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்திய மருத்துவ மறையில் பெருமளவிலான மூலிகைகள் மருத்துவக் குணங்கள் கொண்டதாகக் கூறப்படுவது உண்மையே ஆனாலும், எல்லா நோய்களுக்கும் மூலிகைகளைக் கொண்டே குணம் தர முடியும் என்று இப்போது கூறுவதில்லை. உயிர்க் கொல்லிக்கு இப்போது தடுப்பு மருந்துகளும் 'ஆன்டிபயோடிக்' மருந்துகளும் புரட்சிகரமாகக் குணப்படுத்துவதால், இவை நெடுங்காலததிற்கு நீடிக்கும். அதே சமயத்தில், கண்டபடி 'ஆன்டிபயோடிக்' மருந்துகளைப் பயன்படுத்துவது எதிர் விளைவுகளை ஏற்படுத்தி நிலைமையை மோசமாக்கியுள்ளது. இதய நோய், ஆஸ்த்துமா, தோல் ஒவ்வாமை, வீக்கம் போன்ற நோய்களுக்கு மூலிகை அடிப்படையிலான மருந்துகள்

இன்றும் விரும்பிக் கொடுக்கப்படுகின்றன. என்றாலும், மனித சமுதாயத்திற்கு இன்று நவீன மருந்துகளும், தேவை; மரபுவழி மருந்துகளான இந்திய மூலிகை மருந்துகளும் தேவை.

**மூலிகை மருந்துகள்**

மூலிகை மருந்துகள் ஊறு விளைவிக்காதவை என்று நம்புவது சரியல்ல. என்றாலும், ஆயுர்வேதம் மற்ற இந்திய மருந்து முறைகளைப் பின்பற்றும் மருத்துவர்கள், தங்களுடைய மருந்துகள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைக் கடுமையாக மறுக்கிறார்கள். எதிர்விளைவுகள் பற்றிய சாத்தியக்கூறுகளை எல்லாம் முன்னரே கண்டறிந்து, பல மூலிகைகளின் கலவையாக மருந்துகளைத் தயாரிக்கும்போது மூலப்பொருளின் பாதக விளைவுகளைக் கட்டுப்படுத்தி விடுவதாக அவர்கள் கூறுகிறார்கள். மேலும், ஆயுர்வேதம் போன்றவை உணவுக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றன. ‘அனுபான’ உபயோகம் பாதக விளைவுகளைக் கட்டுப்படுத்தும் நோய்களை மட்டும குணப்படுத்தாமல், நோய் முதல் நாடி நோயாளியையே குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை இந்திய மருந்துவ முறைகள்.

**புதிய உத்திகள்**

நோயாளிகள்- ஏன், மருத்துவர்களேகூட நெடுநாளைய நோய்களைக் குணப்படுத்துவதற்கே மூலிகைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதும் திடீர் நோய்களைக் குணப்படுத்தப் பயன்படுத்துவது இல்லை என்பதும் ஓரளவிற்கு உண்மையே. பெரும்பாலான மூலிகை மருந்துகள் கச்சா வடிவிலேயே பயன்படுத்தப்படுவதால், அவற்றை நெடுநாட்களுக்கு உபயோகிக்க வேண்டும். அவற்றின் மருத்துவக் குணமும் பின்விளைவும் வெளிப்பட அதிக நாட்களாகும். ‘ஆண்டிப்யோடிக்’, ‘ஸ்டெராய்டு’ போன்ற அலோபதி மருந்துகள் போல உடனே, விளைவுகளைக் காண முடியாது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபை புதிய உத்தி ஒன்றை வகுத்திருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மரபுவழி மருத்துவ முறைகள் பற்றி இது ஆய்வு



மேற்கொண்டது. தொன்றுதொட்டு இருந்துவந்த மருந்து நோக்கு அணுகுமுறைக்குப் பதிலாகப் புதிய நோய் நோக்கு அணுகுமுறை மூலம், இது ஆய்வு செய்ய வலியுறுத்தியது. எல்லா மூலிகை மருந்துகள் பற்றியும் ஆராய்வதற்காக மேம்பட்ட மருந்தியல் ஆராய்ச்சிக்கான மையம் நிறுவப்பட்டது. லக்னோவில் இருக்கும் மத்திய மருந்து ஆய்வுக் கழகத்தில் இது அமைக்கப்பட்டது. தேவையான அடிப்படை ஆராய்ச்சி வசதியை இது வழங்குகிறது.

இரண்டு முக்கியப் பகுதிகளில் இந்த உத்தி ஏற்கெனவே நல்ல பலன்களை வெற்றிகரமாகத் தரத் துவங்கி விட்டது. 'ஷார சூத்ரா' (Kshaarasootra) ஆயுர்வேத மருத்துவச் சரடு, மூல நோய்க்குச் சரியான மருந்தாக அமைந்துவிட்டது. அறுவைச் சிகிச்சையோடு ஒப்பிடுகையில் சிறந்த மருத்துவக் குணங்களை இது காட்டியுள்ளது.

இந்தச் சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனைகளில் தங்க வேண்டியதில்லை. வீட்டிலிருந்தே செய்துகொள்ளலாம். இந்தப் பரிசோதனை நடந்த பெரும்பாலான அலோபதி மருத்துவமனைகளில், அறுவை சிகிச்சைக்கு மாற்றாக 'ஷாரசூத்ராவைப்' பயன்படுத்தலாம் என்பதை இப்போது ஏற்றுக்கொண்டுள்ளனர்.



கல்லீரல் பாதுகாப்பிற்கு மூலிகைகளைப் பயன்படுத்துவதில் ஓரளவு வெற்றி கண்டிருப்பது மற்றொரு துறையாகும். இந்த மூலக் கூறுகளை குட்கி (Picrorhiza kurroa) பிலாந்தஸ் வகை (Phyllanthus) மூலிகைகள் பெற்றுள்ளன.

## வளம் குறைகிறது

மருத்துவ மூலிகைகளாகிய இயற்கை வளங்கள் குறைந்து வருவது மற்றொரு முக்கிய அம்சம். இதற்குப் பரிகார நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாவிட்டால், இந்தியா ஒருநாள் தனது மூலிகை வளத்தை இழந்துவிடக்கூடும். இங்குதான் உயிரி நுட்பவியல் முக்கியப் பங்கு பணி ஆற்றுகிறது. ஆராய்ச்சியாளர்கள், தொழில்துறையினர் கவனத்தை ஈர்க்க வேண்டிய மூலிகைகள் பல உண்டு.

வெப்பம் காரணமான நோய்களைக் குணப்படுத்தும் மூலிகைகள், இந்திய மருத்துவத் தொழில் உற்பத்திக்குப் பயன்படும் மூலிகைகள், மற்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மூலிகைகள், ஏற்றுமதி செய்யப்படும் மூலிகைகள், அரிதாகிவிட்ட மூலிகைகள் ஆகிய அனைத்து மூலிகைகளையும் பாதுகாப்பது அவசியம்.

## தரக் கட்டுப்பாடு

இந்தியாவில் மருத்துவ மூலிகைகள் மூலமாக மருந்து உற்பத்தி செய்வதில் தரக் கட்டுப்பாடும் ஒரு தரப்படுத்தலும் முக்கியக் குறைபாடாக இருக்கிறது. தரக்கட்டுப்பாடும் ஒரு தரப்படுத்தலும் இல்லாத காரணத்தால், மருந்து உற்பத்தித் தொழிலில் இதைப் பயன்படுத்திக்கொண்டு ஆயுர்வேத மருந்துகள் என்ற

பெயரில் தரக் கட்டுப்பாடோ, ஒரு தரப்படுத்தலோ இன்றிச் சந்தை விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்கிறது. தரக் கட்டுப்பாடு ஒரு தரப்படுத்துதலுக்கான விதிமுறைகளை வகுக்க இந்திய மருத்துவ முறைகள் கழகமும், மற்ற ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்புகளும் முயற்சி மேற்கொண்டுள்ளன.

சில 'முக்கிய மூலிகை மருந்துகளின் தரத்தைக் கட்டுப்படுத்தும் அளவை இதனால் நிர்ணயிக்க முடியும். 'ஷாரசூத்ரா' போன்ற மிகச் சிரமமான மருந்துக் கலவையை ஒருதரப்படுத்தி வெற்றிகண்டது இங்கே குறிப்பிடத்தக்கதாகும்.



**ரசாயனக் கருத்து**



மருத்துவ மூலிகைகள் வளம் இந்தியாவில் அதிகம் என்பது தொன்றுதொட்டு இருந்துவரும் மருந்து என்றாலும், இவற்றை மருத்துவ ரீதியில் ஆயுர்வேதம் போன்ற மருத்துவ முறைகள் பயன்படுத்துவது தனித்தன்மைவாய்ந்தது. 'அலோபதி' அணுகுமுறைக்கு இது வேறானது. பல ஆயுர்வேத மருந்து மூலிகைகளில், இன்றைய நிலையில், 'ரசாயனம்' என்பது காலத்திற்கு ஏற்றதும் முதுமைத் தடுப்பு, மன இறுக்க நீக்கம், மற்றும் மன நரம்பியல் நோய்களில் இவை மிக நவீன மருந்துகளுக்கு இணையானவை. ஆயுர்வேதத்தின் ரசயானக் கருத்துபற்றி ஆராய்வதற்காக, இந்திய மருத்துவ முறைகள் கழகம் செயல் பிரிவு ஒன்றை அமைத்துள்ளது. 'எய்ட்ஸ்' அல்சர் நோய் போன்றவற்றுக்குத் தகுந்த மருந்துகளைப் பலதுறை

ஒருங்கிணைப்பு ஆராய்ச்சி கண்டுபிடிக்கும்.

**அறிவுச் சொத்து உரிமை**

வேம்பு, டாக்ஸ்அஸ் பக்காட்டா என்னும் செடி வகை இரண்டும் பெரும்பாலும் நாள்தோறும் செய்திகளில் அடிபடும் மூலிகைகள் ஆகும். வேம்பு தானாக வளர்ந்து, எளிதாகக் கிடைக்கும் வகை. ஆனால் டாக்ஸ்அஸ் பக்காட்டா ஒரு குறிப்பிட்ட உயரத்தில் சில நிலப்பகுதிகளில் மட்டுமே வளர்வது ஆகும். இந்த இரண்டு மூலிகைகளின் மருத்துவக் குணத்தை வெளிநாட்டுப் புகழமிக்க ஆய்வுககூடங்கள ஆராய்ந்து, இவற்றின் மருத்துவப் பயன்களைக் கண்டறிந்ததால் இவை முக்கியத்துவம் பெற்றன. பேட்டண்ட் உரிமைகள், அறிவுச்சொத்து உரிமைகள் போன்ற பிரச்சினைகள் இதனால் தோன்றின.

துரதிர்ஷ்டவசமாக, இப்போதைய பேட்டண்ட் சட்டங்கள்படி, செடிகள் பயிர்கள் போன்றவற்றை இயற்கை நிலைப்படியே பேட்டண்ட் செய்ய முடியாது. ரசாயனப் பொருள் கண்டறியப்பட்டால்தான் பேட்டண்ட் செய்ய முடியும். இது பற்றி விரிவான ஒரே மாதிரியான உத்தி ஒன்றை வரைவது பற்றி கூட்டாய்வு நடத்தப் பல்வேறு தேசிய அமைப்புகள் முனைந்துள்ளன.

உயிரி நுட்பவியல் துறை மூலம் மருத்துவ மூலிகைகள், மணப்பொருள் மூலிகைகளின் ஜி.15 நாடுகளின் நுண்ணுயிர் மரபு வங்கி அமைக்கப்பட்டது.

மருந்தாகப் பயன்படுத்த முடியாத பொருள் எதுவும் உலகில் இல்லை என்பது ஆயுர்வேதத்தின் அடிப்பன.

நெறி. மருந்து, நோயாளி, சூழல் பற்றிய மருத்துவரின் அறிவே, அது உயிர்காக்கும் மருந்தா அல்லது உயிர்போக்கும் நஞ்சா என்பதை முடிவுசெய்யும் என்று ஆயுர்வேதம் கூறும்.

**—பிஜபி**



## சிங்காரவேலரின் 'புது உலகம்'

# பாவேந்தரின் வாழ்த்துப்பா

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் நடத்திய திங்கள் இதழான 'புதுஉலகம்' ஏட்டைப் பற்றி பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதை:

**"நல்லறிவும், பெருநோக்கும் கேட்பா ராயின்**
**நம்தோழன் சிங்கார வேலன் கண்ட**
**வெல்லுதமிழ் 'புதுஉலகம்' என்னும் மாத**
**வெளியீட்டை வாசித்தல் வேண்டும் என்போம்"**
**அம்மட்டோ!**
**"புதுஉலகம் மாதமொருமுறை கிடைக்கும்**
**புலன்அடைந்த மாசையெல்லாம் அது**
**துடைக்கும்.**
**இது உண்மை. உபசார வார்த்தை யல்ல**
**எல்லோரும் வாங்கி வாசித்தல் வேண்டும்!**

ஆசிரியரும் வெளியிடுபவரும் திரு. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.95

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

